833
1.53.

REGISTERED No. M. 6165. அணு 2

பத்ஹுல் இஸ்லாம்

فتح الإسلام

FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

ஏப்ரல் 1953.

விஷயம்		பக்கம்
குட்டி பிசாசும் ரொட்டித்துண்டும்	...	1
பொன் மொழிகள் (சோளமாதேவி என். எ. ரஹீம்)	...	7
தெய்வீகக் காதல்—(தொடர் கதை) (மாஸ்டர் கமல் பாபு)	... ...	9
பாஸோவின் மர்மம் (தொடர் கதை)	...	17
முட்டை கேக் (மாதர் பகுதி)	...	22
தொழாதோருக்கு அதபுமாலியின் சவுக்கடி		24
சோகச் சுவடு (வேளாங்கண்ணி-சாக்திதாஸன்)		25
டிரையல் பார்த்தல்	... ...	29
விகடத் துண்டுகள்	... ...	31

பத்ஹுல் இஸ்லாம் ஆபீஸ்:
20, ஹைரோட், திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.

3L
Q7 ж211, N24 F I
N53
187619

பத்ஹுறுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனில்

	வருஷ சந்தா	ரூ. 1-8-0
	தனிப் பிரதி	அணா. 2
மற்ற வெளி நாடுகளில் வருஷ சந்தா		ரூ. 2-0-0

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:

மானேஜர்,
பத்ஹுறுல் இஸ்லாம்,
20, ஹைறரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

ஸைதத்துப் படைப்போர் வசன காவியம்.

இது ஹஸ்ரத் அமீறுல் முஃமினீன் அபூபக்கர் ஸித்திக் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் குமாரர் அப்துல் றஹ்மான் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அமீர்சுபியான் என்னும் ஒரு அரசனோடு வெகு சாமர்த்தியத்துடன் யுத்தஞ் செய்து அவனுடைய மகளாகிய செய்தத்துவை கலியாணஞ் செய்து மதினத்திற்கு வந்தது முதலிய விஷயங்கள் நிறம்பியுள்ள ஒரு அற்புதமான கிரந்தமாகும். இதை வாசிக்கவும் கேட்கவும் வெகு இன்பகரமாயிருக்கும். இதைப்பற்றி நிறம்பச் சொல்ல வேண்டியதில்லை. இதானது மலையாளம் குஞ்சு மூசாப்புலவர் அவர்களால் செய்துள்ள செய்திதத்துப் படைப்போர், என்னும் காவியத்தையே வசனரூபமாகச் செய்யப்பட்டது.

வசனம் விலை அணா. 15 ஷை பாடல் விலை அணா. 12

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

பத்ஹுல் இஸ்லாம்.

ஏப்ரல்—1953.

குட்டி பிசாசும் ரொட்டித்துண்டும்.

ஒரு ஏழை குடியானவன் காலையில் உழுவதற்காக சென்றான். அவன் தன்னுடன் காலை சிற்றுண்டிக்காக ஒரு ரொட்டித்துண்டை எடுத்துச்சென்றான். அவன் தன் ஏரை தயார்செய்துவிட்டு ரொட்டி துண்டை தனது சட்டையில் சுற்றி ஒரு புதரின்கீழே வைத்து விட்டு வேலைசெய்ய துடங்கினான். கொஞ்சநேரமானவுடன், தனது மாடுகள் களைத்த பிறகு அவனுக்கு பசி எடுத்தது. அவன் மாடுகளை ஏரிலிருந்து அப்புரப்படுத்தி மேயவிட்டு, பிறகு தனது சட்டையி லிருந்த ரொட்டியை புசிக்கச் சென்றான்.

சட்டையை எடுத்தான். ஆனால் ரொட்டியைக் காணோம். சட்டையை திருப்பித் திருப்பி பார்த்தான், உதறினான். ரொட்டி துண்டு போய்விட்டது. அந்த குடியானவனுக்கு இது எப்படி போனது என்று தெரியவில்லை.

"இது நூதனமாயிருக்கிறதே. இங்கு யாரையும் பார்க்க வில்லையே. எப்படியும் இங்கு யாரோ வந்திருக்கிறார்கள். ரொட்டியை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்" என்று நினைத்தான்.

அவன் உழுதுக்கொண்டிருக்கும்போது ஒரு குட்டி பிசாசு அவனுடைய ரொட்டியை திருடியது. அவன் ரொட்டியைத்தேடிக் கொண்டிருந்த அந்நேரத்தில் அது அந்த புதரின் மறுபுரம் இருந்துகொண்டு 'அவன் அதை திருடினவனை திட்டுவான்' என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

குடியானவன் ரொட்டித்துண்டு காணாமல் போனது குறித்து வருத்தப்பட்டான். அவன் "என்ன செய்கிறது, நான் பசியில் இறந்துவிடமாட்டேன் யார் அந்த ரொட்டியை எடுத்தார்களோ நிச்சயமாக அவர்கள் அதை தேவையுடையவர்களாக இருந்திருக்க வேண்டும். அது அவர்களுக்கு நன்மையை செய்யட்டும்" என்றான்.

அவன் எழுந்து கிணற்றுக்குச் சென்று தண்ணீர் குடித்தான். சற்று களைப்பாறினான். பிறகு மாடுகளை ஏரில் இட்டு மறுபடியும் உழத் தொடங்கினான்.

அந்த குடியானவன் பாபம் செய்யாமலிருந்தது அந்த குட்டி ஷெய்த்தானுக்கு இடிவிழுந்ததுபோ லிருந்தது. குட்டி ஷெய்த்தான் நடந்தவைகளை சொல்வதற்காக தனது எஜமானாகிய பெரிய ஷைத்தானாகிய இப்லீஸிடம் சென்றான்.

குட்டி ஷைத்தான் இப்லீஸிடம் சென்று தான் எப்படி அந்த குடியானவனின் ஒரே ரொட்டித்துண்டை திருடினான் எனவும், அப்போது அந்த குடியானவன் அந்த ரொட்டித்துண்டை திருடினவனை திட்டாமல், "அது அவனுக்கு நன்மையைச் செய்யட்டும்" என்று சொன்னதாயும் சொன்னான்.

இப்லீஸ் கோபமடைந்து, "அந்த மனிதன் உன்னை ஜெயித்தானென்றால் அது உன்னுடைய தவறுதல். உன்னுடையவேலை என்னதென்பதை நீ அறிந்துக்கொள்ளவில்லை. குடியானவர்களும், அவர்களுடைய மனைவிகளும் இப்படியெல்லாம் செய்தார்களானால் நமது விஷயங்களெல்லாம் என்ன ஆவது? சமாசாரம் இந்நிலையில் விடப்படாது உடனே திரும்பி செல்வாயாக, விஷயங்களை சரியாக செய்துவிட்டு வருவாயாக. இன்னும் மூன்று வருஷத்திற்குள் அந்த குடியானவனை ஜெயிக்காவிட்டால் நான் உன்னை என்ன செய்கிறேன் பார்" என்றான்.

குட்டி பிசாசு பயந்து விட்டான். தனது தவறை எப்படி சரிசெய்வதென்று யோசித்துக்கொண்டு திரும்பிவந்தான். அவன் யோசித்து, யோசித்து கடைசியாக ஒரு நல்ல திட்டம் போட்டான்.

குட்டி பிசாசு ஒரு வேலைசெய்யும் மனிதனாக மாறி அந்தகுடியானவனிடம் வேலைக்கு அமர்ந்தான். முதல் வருஷம் ஒரு ஜலம் உள்ள பள்ளத்தாக்கில் விதைக்க குடியானவனுக்கு புத்தி சொன்னான். குடியானவன் அவனுடைய சொற்களை ஏற்றுக்கொண்டு அவ்வாறே செய்தான். அந்த வருஷம் மழையில்லாத வருஷமாய் இருந்தது. மற்ற குடியானவர்களின் பயிர்களெல்லாம் வெயிலில் காய்ந்தன. ஆனால் இந்த ஏழைகுடியானவனின் பயிர் பலத்தும் உயரமாகவும், நிறைய கதிர்களையுடையதாகவும் வந்தது. அவனுக்கு தனக்கு வருஷமுழுதும் வேண்டிய தானியங்க ளல்லாமல் இன்னும் நிறைய தானியம் மிஞ்சியது.

அடுத்தவருஷம் குட்டிபிசாசு அந்த குடியானவனை குன்றுகளின்மேல் விதைக்க புத்தி சொன்னான். அந்த வருஷம் நிறைய மழையையுடையதாய் இருந்தது. மற்றவர்களுடைய பயிர்கள் அதிக மழையினால் அழுகி அதிக கதிர்களில்லாமல் போயிற்று.

ஆனால் நமது குடியானவனின் பயிர் குன்றுகளின் மேலிருந்ததால் வெள்ளத்தில் அழிவுப் படவில்லை. முன்னைவிட அதிக

187014

மான தானியம் மிஞ்சியது. அவைகளை என்ன செய்வதென்பதே அவனுக்கு தெரியாம லிருந்தது.

அப்போது அந்த குட்டி பிசாசு அந்த தானியங்களிலிருந்து எப்படி மதுபானங்கள் தயாரிப்பது என்று சொல்லிக் கொடுத்தான். அவன் அந்த தானியங்களிலிருந்து காரமான மதுபானங்கள் தயார் செய்து தான் குடிக்கத் துடங்கினுன்; தனது நண்பர்களுக்கும் கொடுக்கத் துடங்கினுன்.

ஆகையால் குட்டிபிசாசு இப்லீஸாகிய தனது எஜமானிடம் சென்று தான் தனது முன் தோல்விக்கு ஈடு செய்து விட்டதாக பெருமை பேசினுன். அப்போது இப்லீஸ் தானே வந்து விஷயங்கள் எவ்வாருக இருக்கின்றன வென்று கவனிப்பதாக சொன்னுன்.

இப்லீஸ் குடியானவன் வீட்டுக்கு வந்தான். அங்கு குடியானவன் நல்ல ஸ்திதியிலுள்ள சுற்றத்தார்களை அழைத்து அவர்களுக்கு மதுபானங்களை கொடுப்பதைப்பார்த்தான். அவனுடைய மனைவி விருந்தாளிகளுக்கு மதுபானங்களை கொடுத்துக் கொண்டிருந்தாள். அவ்வாறு கொடுத்துக் கொண்டு வரும்போது அங்கிருந்த ஒரு மேஜையில் அவள் தடுக்கி ஒரு கோப்பை பானத்தை அவன் மேலே சிந்திவிட்டாள்.

குடியானவனுக்கு கோபம் வந்து, தனது மனைவியை திட்டினுன்: "நீ என்ன நினைத்துக் கொண்டாய்? இதை சாக்கடை தண்ணீர் என்று நினைத்துக் கொண்டாயா? நொண்டி, இந்தமாதிரி வஸ்துவை தரையிலே ஊற்றுகிருயே?"

குட்டிபிசாசு இப்லீஸை தனது முழங்கையால் இடித்து "பார், அந்த மனிதன் தான் தனது ஒரே ரொட்டித்துண்டு காணுமல் போனதற்கு திட்டாமல் இருந்துவிட்டான்."

குடியானவன் இன்னும் தனது மனைவியைத் திட்டிக் கொண்டே தானே மதுபானங்களை யாவருக்கும் கொடுக்கத் துடங்கினுன். அந்நேரத்தில் ஒரு ஏழைக் குடியானவன், வேலை செய்து விட்டு திரும்புகிறவன், வரவேற்கப் படாதவன், வீட்டுக்கு உள்ளே வந்தான். அங்கு இருப்பவர்களுடன் ஸலாம் செய்துக் கொண்டு, உட்கார்ந்தான். அவர்கள் குடித்துக் கொண்டிருப்பதை கவனித்தான். வேலை செய்து களைத்திருந்ததால் தானும் கொஞ்சம் குடித்தால் நல்லதென்று அவனுக்கு தோன்றியது. அவன் உட்கார்ந்து உட்கார்ந்து பார்த்தான். அவனுடைய நாவில் ஜலம்ஊரியது. விருந்தளிப்பவன் அவனுக்கு கொஞ்சம் பானம் கொடுப்பதற்கு பதிலாக, "நான் வருகிறவர்கள் எல்லாருக்கும் கொடுக்க பானம் கிடையாது" என்றுன்.

இது இப்லீஸை மகிழ்ச்சியடைய செய்தது. குட்டி ஷெய்தான் அடக்கிய சிரிப்புடன், "இன்னும் பொருக்க வேண்டும். இன்னும் அநேகத்தைக் காணலாம்" என்ருன்.

பணக்கார குடியானவர்களெல்லாம் குடித்தார்கள். விருந்திடுபவரும் குடித்தார். அவர்கள் ஒருவருடன் ஒருவர் பலவிதமாக மெதுவாக நயமாக பேசத் தொடங்கிவிட்டனர்.

இவைகளை இப்லீஸ் கேட்டு கேட்டு குட்டி ஷைதானைப் புகழ்ந்தான்.

"அந்த பானம் அவர்களை நரிகளைப்போல செய்து ஒருவரையொருவர் ஏமாற்றத் தொடங்கினர்களானல் அவர்கள்யாவரும் நமது கையில்தான்" என்ருன் இப்லீஸ்.

குட்டி ஷைதான், "வரப்போகிறதற்கு காத்திரும். அவர்கள் யாவரும் இன்னொரு கோப்பை குடிக்கட்டும். தற்போது அவர்கள் நரிகளைப்போல இருக்கின்றனர். வால்களை ஆட்டிக் கொண்டு ஒருவரை சுற்றி ஒருவர் வர பார்க்கின்றனர். இனி அவர்களை ஓநாய்களைப்போல காண்பாய்" என்ருன்.

குடியானவர்கள் ஒவ்வொருவரும் இன்னொரு கோப்பை குடித்தனர். அவர்களுடைய பேச்சு சப்தமுடையதாகவும், கரடு முரடுமாகவும் ஆனது. நயமாக பேசினதற்கு பதிலாக ஒருவரையொருவர் வெய்தனர்; ஒருவரை யொருவர் சீரினர். அவர்கள் சண்டை போடவே தொடங்கிவிட்டனர். ஒருவர் முகத்தில் ஒருவர் குத்தினர். விருந்திடுபவரும் சண்டையில் கலந்து கொண்டார். அவரும் பலத்த அடிகள் வாங்கினர்.

இப்லீஸ் பார்த்தான்; இவைகள் யாவும் அவனை மகிழ்ச்சியடையச் செய்தது.

"இது முதல்தரம்" என்ருன் இப்லீஸ்.

ஆனல் குட்டிபிசாசு சொன்ஞன்: "இன்னும் கொஞ்சம் காத்திரும். எல்லாவற்றிலும் சிறந்ததை இனிதான் பார்க்கவேண்டும். அவர்கள் ஒவ்வொருவரும் மூன்ருவது கோப்பை பானம் சாப்பிடும் வரை பொறும். இப்பொழுது அவர்கள் ஒருவருடன் ஒருவர் ஓநாய்களைப்போல விருக்கின்றனர். இன்னொரு கோப்பை குடித்தார்களானல் அவர்கள் பன்றிகளைப்போல நடிப்பர்."

குடியானவர்கள் மூன்ருவது கோப்பையும் குடித்துவிட்டு மிருகங்களைப் போலவே ஆனர். எதற்காக என தெரியாமலும் ஒருவர்சொல்வதை மற்றவர்கள் கேட்காமலும் அவர்கள் பேசினர். சப்தம் போட்டனர்; கூச்சலிட்டனர்.

பிறகு கூட்டம் கலைந்தது. தனியாகவும் இரண்டு இரண்டாக வும், மூன்று மூன்ருகவும், தெருவில் ஆடிக்கொண்டு சென்றனர். விருந்தளித்தவர் விருந்தினர்களை சீக்கிரம் போகச் செய்ய வெளியே வந்தார். அங்கேயிருந்த ஒரு சேற்றுத் தண்ணீரில் விழுந்து, உச்சிமுதல் உள்ளங்கால்வரை சேறைப் பூசிக்கொண்டு, பன்றியைப் போல் உறுமிக்கொண்டு கிடந்தார்.

இது இப்லீஸுக்கு இன்னும் மகிழ்ச்சியை உண்டு பண்ணி யது.

இப்லீஸ், "சரி, நீ ஒன்ரும்தரம் பானத்தை பிடித்தாய். நீ ரொட்டித்துண்டு விஷயமாக செய்த தவறுதலுக்கு ஈடுசெய்து விட்டாய். ஆனல் எப்படி அந்த பானத்தை தயார் செய்வது என்று சொல்லு. நீ அந்த பானத்தில் முதலில் நரிகள் இரத் தத்தை கலந்திருப்பாய். அதனுல்தான் முதலில் அவர்கள் நரி களைப்போல் நயமாய் நடந்தார்கள். பிறகு அதில் ஓநாய்களின் இரத்தத்தை கலந்திருக்க வேண்டும். அதனுல்தான் அவர்கள் ஓநாய்களைப்போல் அவர்கள் கொடூரமாக இருந்தார்கள். கடைசி யாக அதில் பன்றிகள் இரத்தத்தை கலந்திருக்க வேண்டும் ஆகை யால்தான் அவர்கள் கடைசியாக பன்றிகள் போல் நடித்தார்கள்" என்ருன் இப்லீஸ்.

"இல்லை" என்று குட்டி பிசாசு, "நான் அப்படி செய்யவில்லை. நான் செய்ததெல்லாம் என்னவென்ருல் அந்த குடியானவனுக்கு தேவைக்குமேல் தானியங்கள் இருக்கும்படி செய்ததுதான். மிரு கங்களின் சுபாவம் மனிதனிடம் எப்போதும் இருக்கிறது. எவ் வளவு காலம் அவனுக்கு தேவையான தானியம் மட்டும் இருக் கிறதோ அதுவரையில் அந்த சுபாவம் அடக்கத்தில் இருக்கிறது. அதுவரையில் அந்த மனிதன் தனது ஒரே ரொட்டித் துண்டு போயும் பாதிக்கப் பட்டவனுக இல்லை. ஆனல் அவனுக்கு தேவைக்கு மேல் தானியம் இருந்தால் அதிலிருந்து இன்பம் அடைய வழி பார்த்தான். நான் அவனுக்கு ஒரு இன்பத்தைக் காட்டினேன் —— குடித்தல். அவன் கடவுள் கொடுத்த வெகுமானத்தை தனது சொந்த இன்பத்திற்காக மதுபானமாக மாற்றினபோது, அவனிடமிருந்த நரி, ஓநாய், பன்றி இவைகளின் சுபாவங்கள் வெளி வந்தன. அவன் குடித்துக் கொண்டே இருப்பானுகில் அவன் எப்பொழுதும் மிருகமாகவே இருப்பான்."

இப்லீஸ் குட்டி செய்தானைப் புகழ்ந்தான். முன்செய்த குற் றத்தை மன்னித்து விட்டான். அந்த குட்டி ஷெய்தானுக்கு ஒரு மேல் பதவியைக் கொடுத்தான்.

எங்களது பிரசுரங்களில் சில:-

யூனானி வைத்திய முறைகள்	3	0	0
கைத்தொழில் சம்பாதனைவழிகள்	2	8	0
பெரிய கசசுல் அன்பியா (3பாகம்)	9	8	0
நபிநாயகத்தின் ஜீவிய சரித்திரம்	8	0	0
நபிநாயகத்தின் திருவாக்கியம்	2	4	0
முஹியித்தீன் ஆண்டவர்கள் காரண சரித்திரம்	3	0	0
கதீஜா நாயகி ஜீவிய சரித்திரம்	1	4	0
ஆயிஷா நாயகி ஜீவிய சரித்திரம்	1	9	0
பாத்திமா நாயகி ஜீவிய சரித்திரம்	1	8	0
ஷை மூன்று சரித்திரங்கள் சேர்ந்து ஒரே கட்டம்	4	0	0
(அரபி)			
குர்ஆன் 13வரி றப் கலிகோ பைண்டு	7	8	0
குர்ஆன் 13வரி கிளேஸ் கலிகோ பைண்டு	9	8	0
குர்ஆன் 15வரி கலிகோ பைண்டு	4	8	0
அலிப் பே ஜுஸுூ 1க்கு	0	1	0
ஷை 100-க்கு	3	0	0
ஷை 1000 க்கு	25	0	0

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்.

கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

பொன் மொழிகள்.

தொகுத்தவர், சோளமாதேவி, N. A. ரஹீம்.

"எல்லாம் மனிதன் தான்! இயற்கையின் சக்திகளை அடிமைப் படுத்துதவற்கான ஆற்றல்களும் இறைவனால் மனிதனுக்கு அருட் கொடையாக வழங்கப்பட்டிருக்கின்றன" இக்பால்.

"உண்மையான வீரம் பிறரைக் கீழே வீழ்த்தி விடுவதன்று! கோபம் வரும் சமயம் அதனை அடக்கிக் கொள்கிறவனே உண்மை யான வீரன்" நபிகள் நாயகம் (ஸல்)

"இறைவன் சட்டத்திற்கு சிரம் சாய்ப்பது தான் எனது முதற் கடமை. அதற்குத் தான் நான் கீழ்படிவேன்" மௌலானா முஹம்மதலீ.

"விஞ்ஞானம் நமது வலது கரத்தில் இருக்க வேண்டும். தத்துவஞானம் நமது இடது கரத்தில் இருக்க வேண்டும். நமது தலை மீது "லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றஸூலுல் லாஹி" என்னும் கலிமா தையிபா கிரீடமாகச் சூட்டப்பட வேண்டும்" சர் ஸய்யது அஹ்மதுகான்.

"ஆபத்தும் கஷ்டங்களும் ஏற்பட வேண்டும். அதை நாம் வெல்ல வேண்டும். அதுவே ஆண்மகனுக்கு அழகு" அவுரங்கஜீப்.

"எவனுடைய ஹிருதயம் ஏழைக்காக இரத்தம் வடிக்கிறதோ அவனையே நான் மகாத்மா என்பேன்" விவேகானந்தர்.

"கல்வி என்பது ஒருவனது இளமையோடு மட்டும் தொடர் புடையதன்று. எனக்கு எண்பத்தெட்டு வயதாகிறது. ஆனால் இன்னும் எவ்வளவோ படிக்க வேண்டியிருக்கிறது" பெர்னாட்ஷா.

"காபிர்களை அழிப்பதற்கோ, அல்லது பயமுறுத்தி இஸ்லாத்தில் சேரும் படி வற்புறுத்துவதற்கோ இஸ்லாம் வாளை எடுக்கவில்லை! உலக முழுதும் அழியா உண்மையாகிய ஏக தெய்வத்துவத்தைப் பிரகடனப் படுத்துவதற்கே இஸ்லாம் வாளை எடுத்தது" சர் ஸய்யது அஹ்மதுகான்.

"கல்வியின் சிறந்த லக்ஷியம் செயலாற்றும் சக்தியேயன்றி அறிவு பெறுவது மட்டுமல்ல" ஸ்பென்ஸர்.

"இவ்வுலகில் ஒரு தடவை தான் வாழ முடியும். நீ அவ்வாழ்க்கையை பிரகாசமயமாக்கும்படிச் செய்" பெர்னாட்ஷா.

"மரணத்திற்கு அஞ்சாதவர்களே உயிர் வாழத் தகுதியுடையவர்கள்" மெக்ஆர்தர்.

" வெற்றி எண்ணத்தைப் பொறுத்திருக்கிறது " நெப்போலியன்.

" சிரிப்பு ஒன்று தான் மனிதனுக்கும் மிருகத்திற்கும் இடையே உள்ள எல்லை. அது கவலையை ஒழிக்கும் ஆற்றல் கொண்டது " இங்கர்ஸால்.

" எல்லாக் காரியங்களும் என்னால் சாதிக்க முடியும். இறைவன் என்னுடைய முயற்சியில் உதவி செய்து என்னுடைய காரியத்தை வெற்றிகரமாக முடித்துத் தருவான் " மூஸா (அலைஹி)

சோம்பேறித்தனமாய் இருப்பது தற்கொலை செய்வதற்கு ஒப்பாகும் " செஸ்டர்பீல்ட்.

" பயமென்னும் கண்களுடன் வருங்காலத்தை நீ பார்க்க வேண்டாம் " ஹாரிமன்.

" யார் நம்முடன் போராடுகிறானோ அவன் நம் நரம்புகளுக்கு முறுக்கேற்றுகிறான். நம்முடைய திறமையைக் கூர்மை படுத்து கிறான். ஆதலின் நமது எதிரியே நமக்கு உதவி புரிபவன் " எட்டின்ட் பர்க்

" நம்முடைய மகத்துவமானது விழாமல் இருப்பதில்லை. விழுந்த ஒவ்வொரு தடவையும் மறுபடியும் மறுமலர்ச்சி பெறுவதில் தான் மகத்துவம் இருக்கிறது " கன்பூஸியஸ்.

விரைவில் வளர்கிறது!

"சிந்தனைச் சோலை"

ஆசிரியர்:—வேளாங்கண்ணி, கவிஞர் சாக்திதாஸன் புத் துலகிர்கோர் புரட்சிகரமான பாடல்கள் நிறைந்த புத்தக ஏடுகாணிக்கை! கண்கவர் அழகுடனும், கவர்ச்சிகரமான கருத்து சொரிந்த நடையுடனும் அரிய இசைகளில் அரசி யல், சமுதாய ஆர்ப்பறிப்புகளுடன் உறுவெடுக்கிறது.

விபரங்களுக்கு

"முஸ்லிம் யுவர்க்கழக செயற்குழுவினர்"

முஸ்லிம் ஸ்திரீட்

வேளாங்கண்ணி P. O.

நாகப்பட்டினம் தாலுக்கா

(தஞ்சைஜில்லா)

தெய்வீகக் காதல்.

(மாஸ்டர் கமல் பாபு)

(தொடர் கதை 3-வது பகுதி.)

மறுநாள் சொல்லியபடி குஷ்தர்ஜான் வண்டி அனுப்பியிருந்தாள். இர்ஷாதும் நானும் புதுவீட்டிற்குப் போனோம். அங்கு கலியாணவீடுமாதிரி அநேக ஜனங்கள் அலங்கார ஆடைகள் அணிந்து அங்குமிங்கும் அலைந்து சொண்டிருந்தார்கள். குஷ்தர்ஜானுடைய சகோதரி நஷ்தர்ஜான் நம்மை மரியாதையோடு வரவேற்றாள். அவளுடைய வரவேற்பையும் பொருட் படுத்தாமல் நம் கண்கள் குஷ்தரை தேடின. நம் எண்ணத்தை நன்றாக யூகித்தவள்போல் 'குஷ்தர் அந்த அறையில் இருக்கிறாள்' என்று ஒரு அறையை காட்டினாள் நஷ்தர்ஜான். அவள் காட்டிய அறைக்குள் போனோம். பதினேழு வயது மதிக்கக்கூடிய ஒருயுவதியுடன் குஷ்தர் பேசிக் கொண்டிருந்தாள். பேசிக் கொண்டிருக்கும் பெண் கலியாணமானவள் என்று அவள் கழுத்திலிருந்த கருமணி சாட்சிகூறியது.

'அஸ்ஸலாமு அலைக்கும், யாகுஷ்தர் வசயிதா' என்றாள் இர்ஷாத். குஷ்தருடன் பேசிக் சொண்டிருப்பவள் ரஜாக்பாஷாவின் தங்கை சயிதாபானு என்று சொல்லாமலே தெரிந்து கொண்டேன். "வஅலைக்குமுஸ்ஸலாம். வாருங்கள்" என்று முகமலர்ந்து வரவேற்றாள் சயிதா. நாங்களிருவரும் எங்களுக்காக முன்கூட்டியே போடப் பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்தோம்.

"சயீதா! இவள்தான் நான் இதுவரையில் சொல்லிக் கொண்டிருந்த ஹபீபுன்னிஸா" என்று என்னைக்காட்டி அறிமுகப் படுத்தினாள் குஷ்தர்.

"இதுதான் முதல்சந்திப்பா?" தெரியாதவள் போல் குறுக்கிட்டாள் இர்ஷாத்.

"ஆம், பெரியவர்கள் சொன்ன பழமொழிகளுக்கு இவள் மட்டும் விதிவிலக்கா?" சயிதா துயரத்துடன் சொன்னாள்.

"அப்படியானால் அனேக பழமொழிகள் இருக்கிறதா? அதை சொல்லேன். நாமும் கேட்கிறோம்" குறும்புத்தனமாக குஷ்தர் கேட்டாள்.

"பணம் பந்தியிலே குலம் குப்பையிலே பணமுள்ளவனுக்கு பந்துக்கள் இல்லை. பசித்தவனுக்கு ருசியில்லை. பணமிருந்தால்

பறையனும் முறையில் பிள்ளை. பணம் இல்லாவிட்டால் பெற்ற பெண்ணும் பிச்சைக்காரி. பணமுள்ளவர்கள் இனம், பணமில்லாதவர்கள் பிணம், பணமிருந்தால்........"

ஸயீதா இவ்விதமாக பாடம் ஒப்பிப்பவள்போல் அடுக்கிக் கொண்டே போனாள். ஆனால் என்னால்தான் கேட்க சகிக்கவில்லை. எனவே அவளை இடைமறித்து சொன்னேன்:

"போதும் சயீதா. புண்பட்டிருக்கும் என்மனதில் பழமொழி என்ற பொடியை தூவி என் வேதனையை அதிகப்படுத்தாதே. ஆண்டவன் படைத்த ஆண் பெண் யாவரும் சகோதர சகோதரிகள் என்று சன்மார்க்கம் சாட்சிகூறியும் செல்வத்தின் சிறப்பாலும் பணத்தின் பெருமையாலும் மூர்க்க மதியினால், மிஸ்கீன்தனத்தை நாடியே முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் உம்மத்தில் பிறந்தோமென்பதையும் மறந்து, பரிசுத்த இஸ்லாம் மதத்தையே பரிகாசம் செய்யும் பாவனையில் முஸ்லிம் சமூக தோழர்களுக்கே துரோகம் செய்யும் செல்வந்தர்களின் சதிகளுக்கும், அவர்கள் வஞ்சகமாக வேற்றுமை பிரிக்கும் வடிகட்டின முட்டாள் தனத்திற்கும் நான் அடிமைப் பட்டவளில்லை. வாஞ்சையுடன் பார்க்கவந்த என்னை வேற்றுமை பாராட்டும் வஞ்சகி என்று எண்ணாதே. உன் பழமொழிகளின் விதிகளுக்கு என் பெற்றோர்கள் உட்பட்டிருந்தாலும் நான்மட்டும் மதிகெட்டவள் இல்லை" சோகமும் துயரமும் கலந்தபடி சொன்னேன்.

"ஹபீப், பணக்கார குடும்பத்தில் பிறந்த நீ ஏழைகள்மீது இவ்வளவு பாசமும் பரிதாபமும் கொண்டிருப்பாய் என்று நான் கருதவில்லை......" சயீதாபானு தன் பேச்சை முடிப்பதற்குள் "எம்மா நீங்கள் இருவருமேதான் பேசுவீர்களா அல்லது நமக்கும் பேச சந்தர்ப்பம் அளிப்பீர்களா" என்று குறுக்கிட்டாள் இர்ஷாத்.

ஐந்து பிள்ளைகளையும் ஆறு பிள்ளைகளையும் பெற்றவர்களெல்லாம் அறியாத பெண்கள் ஆடுவதுபோல், ஒருவளைத் துரத்திக் கொண்டு மற்றொருவளாக நாங்கள் உட்கார்ந்திருந்த அறைக்குள் எக்காள மிட்டு சிரித்துக் கொண்டே வந்தார்கள். வந்தவனிதா மணிகள் வெளியேறி சென்றதும் குஷ்தர் சொன்னாள்:

"வெளியே ஆண்பிள்ளைகள் இருக்கிறாரென்று கொஞ்சமும் அச்சமில்லாமல் அடக்கம் ஒடுக்கம் என்பதையே அறியாதவர்கள் போல் இப்படி ஆர்ப்பாட்டம் செய்கிறார்களே!"

"இந்த அருவெறுப்பான ஆட்டத்தை பார்த்துக் கொண்டிருந்தால் நம் அறிவும் அழிய வேண்டியது தான்" அவன் பேச்சை ஆமோதித்து நான் சொன்னேன்.

"அப்படியானால் வேறு எங்கேபோய் பேசுவது?" இர்ஷாத் கேட்டான்.

"என் நம்வீட்டில் போய் பேசலாமே" சமீதா சொன்னாள்.

"அங்கு யாருமில்லையா?" இர்ஷாத் கேட்டான்.

"ஜமிலா, கலிலா, இருவரும் மாமியார் வீட்டுக்குப் போய் இருக்கிறார்கள். ஹமிதா தன் மணவாளனுடன் மதராஸில் வாசம் செய்கிறாள், ரஹிமாபுவா இங்கே இருக்கிறார், ரஹ்பர்பாக்ஷா, அகிலாபானு வெளியில் விளையாடிக் கொண்டிருப்பார்கள். ரஜாக் பாக்ஷா வீட்டில் இருக்கிறாரோ! இல்லையோ! தெரியாது. வீடு மட்டும் காலியாக தானிருக்கிறது" சமீதாவுக்கு பதிலாக குஷ்தர் சொல்லி முடித்தாள்.

"அங்கே அவரிருந்தால் நாம் எப்படி சுதந்திரமாக பேச முடியும்?" கலவரத்தோடு கேட்டேன். ஆனால் என்மனதில்மட்டும் என்பேச்சை ஆமோதித்து அங்கு போகாமல் இருப்பார்களோ என்றதில் உண்டாகிவிட்டது.

"அவர் இருந்தாலும் திவான்காணாவில் (டிராயிங்ரூம்) இருப்பார். நாம் ஹாலில் அல்லது கொல்லைபக்க அறையில் இருக்கலாமே" ஸமீதாசொல்லிக் கொண்டே எழுந்தாள். அரசர் எழுந்த உடன் ஆட்களும் எழும்புவதுபோல நாமும் அவள்பின் தொடர்ந்தோம். இருவீட்டிற்கும் போகவர கொல்லை புரம்வழி இருந்தது. அவ்வழியாக நாம் அந்த வீட்டிற்கு போனோம். வீடு காலியாக தானிருந்தது. எல்லோரும் எதையோ பார்த்தார்கள். ஆனால் என்கண் மட்டும்ரஜாக்பாக்ஷாவை தேடி திவான் காணாபக்கம் வட்டமிட்டன.

இதை அறிந்த இர்ஷாத்: "என் ஹபீப்! திவான் காணா பார்க்க வேண்டுமா? வாயேன் போய் பார்க்கலாம்" என்று என கையை பிடித்து இழுத்துக் கொண்டுபோனாள். அங்கு நான் கோரும் காதலர் காட்சிதரவில்லை. அவருக்கு பதிலாக சில நாற்காலிகளும் ஒரு மேஜையும் அதன் மேல் சிலசஞ்சிகைகளும் இதாபத்திரிகைகளும் இருந்தன. பெயருக்கு தான் ஏழை என்கிறார்களே ஒழிய, அவ்வீட்டிலுள்ள பொருள் யாவும் விலை உயர்ந்ததாகவே இருந்தன.

"வெளியே சென்ற அண்ணா இன்னும் வரவில்லை போலிருக்கு. நாம் இங்கேயே உட்காரலாமே" சமிதா சொல்லிக்கொண்டே அறைக்குள் நுழைந்தாள். நாமும் அதை மறுக்காமல் அங்கிருந்த நாற்காலிகளில் அமர்ந்தோம். மேஜைமீதுள்ள புஸ்தகம் ஒன்று எடுத்துபார்த்தேன். அது "சந்திப்பின் சந்தோஷம்" என்ற வேவரின் தத்வாலத்தின் நாவலாக இருந்தது.

இதை கடைக்கண்ணால் பார்த்தகுஷ்தர். "ஹபீபுக்கு பிடித்த மானபுஸ்தங்கள் தான் இங்கு இருக்கிறது" மனதில் பரிகாசமும் முகத்தில் புன்சிரிப்புடனும் சொன்னாள்.

நான் ஏதோ சொல்லவரயெடுத்தேன். இதற்குள் "சமிதா, சமிதா" என்று அவள் தாயார் கூப்பிட்டு கொண்டே வந்தாள். ஏனம்மா என்று கேட்டபடி சமிதாவும் போனாள்.

"பால் எங்கே வைத்தாய். அதை எடுத்துகொடு" அவள் தாயார்கேட்டாள்.

"எடுத்து கொடுக்கிறேன். அய்ஷாபுவா மகள் ஹபீப் வந்திருக்கிறாளே பார்த்தாயாஅம்மா?" சமிதாசந்தோஷத்துடன் கேட்டாள்.

"அறையில் இருக்கிறாளா?" கேட்டுகொண்டே நாம்இருக்கும் இடத்திற்கு வந்தாள் அவள் தாயாரான என்சிறிய பாட்டி.

அவரை பார்த்ததும், நான் ஏதோ அவருக்கு பெரியதுரோகம் செய்து விட்டது போல் என்மனதில் தோன்றியதோடு என்னையும் அறியாமல் என்கையில் இருந்த சஞ்சிகை நழுவி விழுந்ததும் அல்லாமல் என்கைகள் அவர் காலை தொட்டு முத்தமிடசெய்தன.

அவர் தன்இருகரங்களாலும் தூக்கிவிட்டு, "உன் அன்புக்கு தகுந்த ஆடவன் கிடைத்து சந்தான பாக்கியத்தோடு சந்தோஷமாக இருக்க ஆண்டவன் அருள்புரிவானாக" என்று அன்புடன் ஆசீர்வதித்தார். இவர் ஆசீர் வாதத்தை ஆமோதித்து வானுலகத்தில் உள்ள "ஹூருல் ஈன்" கள் எல்லாம் "ஆமீன்" கூறுவதுபோல் தெரிந்தது.

சில வினாடிகள், க்ஷேமலாபத்தை விசாரித்தபின், "டீ தயார் செய்து விட்டு பாலுக்காக வந்தேன். மறுபடியும் சாவகாசமாக பேசுகிறேன்" என்று எனக்கு சொல்லிவிட்டு, சமீதா நீயும் என்னுடன்வந்து இவர்களுக்கெல்லாம் டீ கொண்டுவந்து கொடு, என்று தன்பெண்ணுக்கு கட்டளையிட்டு விரைவாக சென்றார். சமீதாவும் அவர்கட்டளையை நிறைவேற்ற சென்றாள்.

"பார்த்தாயாடி, காதலனை பார்க்கவுமில்லை, கல்யாணம் ஆகவுமில்லை. அதற்குள் மாமியார் முறை கொண்டாடி காலில் விழுந்து விட்டாள்" குஷ்தரை நோக்கி இர்ஷாத் சொன்னாள்.

"இதோ பார்இர்ஷாத் உன்வீட்டில்தான் யாருமில்லாதிருந்தார்கள், அதனால் உன் வேடிக்கைகளை வரவேற்றேன். இங்கு ஸயீதாபாலும் இருக்கிறாள் அவள் எதிரில் ஏதாவது இவ்விதமான வேடிக்கைகள் செய்வதாய் இருந்தால் நான் இப்போதே என் வீட்டுக்கு போய் விடுவேன்" நான் உண்மை கோபத்தோடு சொன்னேன்.

“என்டி நம் அறிவெல்லாம் அடகு வைத்து விட்டோமென்று நினைத்தாயா? அவளிருக்கும் போது பரிகாசம் செய்வோமா?” இர்ஷாத்துக்கு பரிந்து குஷ்தர் சொன்னாள்.

அயலார் வீடுஎன்று அறிந்தும், இர்ஷாத் தன் சொந்த வீடாக பாவித்து சுதந்திரமாக அங்கிருந்த ஒரு அலமாரியை திறந்து அதிலுள்ள பல்புஸ்தகங்களிலிருந்து ஒன்றை எடுத்து “எதிர்பாராத வருகை” புஸ்தகத்தின் பெயரை படித்துக்கொண்டே சிறித்தாள்.

“அதைப் பற்றிரொம்பசந்தோஷம்” என்ற சப்தத்துடன் நாமிருந்த அறையின் வெளிபுற கதவுதிறந்தது. இதை கேட்ட நானும் இர்ஷாத்தும் தீயை மிதித்தவர்போல் ஹாலுக்கு ஓடி வந்து விட்டோம். ஆனல் குஷ்தர்மட்டும் அங்கேயே உட்கார்ந்திருந்தாள். நாம் இருவரும்யார் வந்தது என்று கதவுஓரமாக நின்றுபார்த்தோம்.

“என் குஷ்தர், இன்றுதான் புது குடித்தனமா”? வந்தவர் கேட்டவாறு நாற்காலியில் அமர்ந்தார்.

“ஆம் அண்ணு அவிடம் அதிக கூச்சலாக இருப்பதால்தான் உங்கள் அனுமதியையும் பெருமல் ஹாயாக வந்து உட்கார்ந்துக் கொண்டோம்”

“அதற்கென்ன குஷ்தர், உனக்கில்லாத இடம் இவ்வுலகத்தில் உண்டா?” புன் சிரிப்புடன் அவர் சொன்னர்.

“இவர்தான் உன்மனதை கொள்ளை அடித்த கள்ளர், கண்குளிர பார்த்து கொள்ளடி அம்மா” குறும்புதனமுள்ள இர்ஷாத் அவரை எனக்கு அரிமுகபடுத்தி வைத்தாள். நானும் நன்ருக பார்த்தேன். அவ்ரை பார்த்ததும், என் மனதில் விவரிக்கதகாத ஒருவிதமான குதூகலமும் சந்தோஷமும் பீரிட்டு வந்ததோடு சந்திப்பின் சந்தோஷ விறகு ஆசை அடுப்பான என் மனதில் எரிய அதன் ஜுவாலே முகத்தில் பிரகாசிக்க செய்தது.

அவருக்கு வயது இருபத்தி ஒன்றுதானிருக்கும். நல்லகட்டு மஸ்தான திரேகம்! மன்மதன்போல் அழகாஇல்லாவிட்டாலும் பரவாஇல்லை என்ற பட்டம் நிறைய பெற்றிருந்தார். வாலிப வீட்டிற்குள் எரியும் அவர் அகத்தின் அன்பு விளக்கு முகத்தில் பிரகாசித்து கொண்டிருந்தன. கண் சிரியதாக காணப்பட்டாலும் கம்பீரமான பார்வை இருந்தது. அவர் வாயிலிருந்து புன்சிரிப்புடன் கலந்து வரும் வார்த்தைகள் யாவும் என் வாழ்வின் இன்ப நாதமாக தோன்றின. அவர் அணிந்திருந்த ஸ்திரி கலையா ஆடைகள்யாவும் விலைஉயர்ந்ததாகவே இருந்தது. ஆங்கிலத்தில் சொல்லக்கூடிய ஜன்டல்மேனும் இவர் இல்லை, அந்த ஜன்டல்மேனுக்கு சற்றுகுறை

வாகவுமில்லை என்று அவர்கையில் இருந்த “மேபோல்மைனர்” சிகரெட்டு சிரித்துக்கொண்டும் புகைத்துகொண்டும் சொல்லிற்று. பேசும்போது ஆடும்அவர் துர்கி தொப்பியின் குஞ்சங்கள், வா, வா வந்து பேசு என்று என்னை அழைப்பதுபோல் தோன்றியது.

“அண்ணா, நீங்கள் வந்ததும் இவ்விடமிருந்து ஓடியவர்கள் யார் தெரியுமா?” குஷ்தர் கேட்டான்.

“உன் சகி இர்ஷாத் பேகம் அல்லது உங்க வீட்டிற்கு வந்திருக்கும் விருந்தாளியாராகிலும் இருப்பார்” சாந்தமுடன் பதில் அளித்தார்.

“அவ்விதமாக இருந்தால் நான்கேட்கவேண்டிய அவசியமிருக்காதே”

“அப்படியானால் பேச்சை அதிகபடுத்தாமல் யாரென்று நீயே சொல்லிவிடு”

“அப்படிவாருங்கள் வழிக்கு, வந்திருப்பவள் ஹபீபுன்னிஸா தெரிந்ததா?”

“எனக்கு தெரியாத இந்த மாதிரி அநேக நிஸாகள் இன்று உங்கள் வீடடுக்கு வந்திருப்பார். அதில் இந்த நிஸாவைமட்டும் குறிப்பிட்டு கூறவேண்டிய காரணம்?”

“அவள் உங்க பந்துஜனங்களிலுள்ளவள் என்றுதான் சொன்னேன்”

“என் பந்துக்களிலா? அப்படியானால் அவங்க அம்மா அப்பாவுக்கு பெயர் கிடையாதா?”

“அவள்தான் உங்களை தெரிந்துக்கொள்ள ஆத்திரபட்டாள் என்றால் அவளுக்குமேலே நீங்க அவசரப்படுகிறீர்களே?”

“நான் கேட்பது உனக்கு அவசரமாக தோன்றினால் உன் இஷ்டப்படி சாவகாசமாக சாயிந்திரம் சொல்லு”

“வீரப்பு ஆண்களின் நிழல் என்பது நிஜம்தான். வந்திருப்பது உங்கஅக்கா அய்ஷாபுவா உடைய மூன்றும் மகள் ஹபீபுன்னிஸா. தெரிந்ததா இல்லையா?”

“தெரிந்துக்கொள்ள கூடிய சக்தியை தெருவில் வீசி எறியவில்லை. ஆனால்............”

“இல்லை, இவளுடைய அக்கா இருவருக்கும் மணமாகிவிட்டது இவளுக்கு இன்னுமாகவில்லை” அவர்வார்த்தை முடிப்பதற்குள் குஷ்தர் குறும்புதனமாக குறுக்கிட்டு சொன்னாள்.

"ஏய் குஷ்தர், என்னை பைத்தியகாரன் என்று நினைத்தாயா? நான் எதையோ சொல்லவந்தால் நீ என்னமோ வாய்க்குவந்ததை உளறுகிறாயே"

"அண்ணாவந்து விட்டாரா? வந்து விட்டீர்களே" என்று கேட்டு கொண்டே டீ கேட்டலுடன் சயீதாபானுவந்தாள். இதை கேட்ட குஷ்தர் "அண்ணா இனிமேல் உங்களிடம் வாதம் செய்துக் கொண்டிருந்தால் டீயை இழக்கநேரிடும்" சிரித்துக்கொண்டே சொல்லிவிட்டு வெளியே வந்தான் குஷ்தர். சயீதா டீ கோப்பையில் ஊற்றிஎம்மிடம் கொடுத்தாள்.

"முதலில் உங்க அண்ணாவுக்கு குடுத்துவிட்டு வா மறுபடியும் நாம் குடிக்கலாம்" என்று மெதுவாக நான் சொன்னேன்.

இதை கேட்ட குஷ்தரும் இர்ஷாதும், சயிதா இருக்கிறாள் என்ற பயத்தால் மவுனமாக ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்துக் கொண்டதை நான் கவனிக்காமலில்லை. சயீதா ஒரு கப் டீயை எடுத்துக்கொண்டு அவரிடம் சென்றாள்.

"எனக்கா டீ. நான் இப்பதான் ஹோட்டலில் குடித்துவிட்டு வந்தேன் சயிதா" அவர் மறுத்து கூறினார்.

உங்க வீட்டு டீயாக இருந்தால் மறுக்கலாம் இது குஷ்தர்ஜான் வீட்டில் நமக்காக ஸ்பெஷலாக தயார்செய்தது. மறுக்காமல் சும்மா குடித்துபாருங்கள்" இர்ஷாத் சொன்னாள்.

"எம்மா இர்ஷாத் சவுக்கியமா? எப்போ கல்யாணம்?" அவளுடைய தொண்டை குரலை கண்டுகொண்டு கேட்டார் அவர்.

"தாங்கள் இஷ்டப்பட்டால் நாளையே முடித்துவிடும். தங்கள் அன்புக்கேற்ற அழகியையும் தேடி பிடித்து விட்டேன்" அவர் கேள்விக்கு நேர் விரோதமாக இர்ஷாத் பதில் சொன்னாள்.

"மேல் விஷாரம் எத்தனை மைல் என்றால் மூகக்ஷவரம் செய்ய மூன்றணா என்பதுபோல நீயும் குஷ்தருக்கு அக்காளாகத்தா னிருக்கிறாய்" இதை சொல்லிவிட்டு டீ குடிக்க ஆரம்பித்தார்.

"எல்லோரும் பேசினாலும் ஹபீப் மட்டும் பேசாமல் இருக்கிறானே என்?" சயிதாபானு இக்கேள்வி யாரை கேட்டாள் என்பது அவளுக்கே தெரியாது போலிருக்கு.

"வேடிக்கை செய்யும் வார்த்தைகள் வாய் அளவில் வந்திருக்கிறது. ஆனால் அதை வெளிவராதபடி வெட்கம் வழி மறிக்கிறது." என் மனதில் உள்ளதை ஜோஸ்யம் பார்த்ததுபோல் அவர் சொன்னார்.

"ஹலோ மிஸ்டர் ரஜாக் பாக்ஷா" வெளியில் இருந்து சப்தம் வந்தது.

"ஜஸ்ட் எ மினிட் வெயிட் பிலீஸ்" பதில் கொடுத்துவிட்டு புல்ஸூட் அணிந்து பக்கல்ஸ்களை பூட்டிக் கொண்டிருந்தார்

"நோ டைம் பார் வாய்டிங்க் பிரதர் கம்மான் குயிக்" தொடர்ந்து மற்றொரு குரல் வந்தது

இதற்கு அவர் ஒன்றும் பதில் சொல்லாமல் வெளியே சென்று கதவை வெளிபக்கமாக பூட்டிக் கொண்டு போய்விட்டார்.

"யார் இவ்வளவு அவசரமாக வந்து கூப்பிட்டது?" நான் சயீதாவை கேட்டேன்.

"அவர் ஆருயிர் நண்பர், அப்துல் றஹ்மான் அப்துல்கனி என்பவர்கள்" சயீதா சொன்னாள்.

அவருக்கு ஆருயிர் நண்பர்களாக இருந்தாலும் எனக்கு மட்டும் அந்நேரத்தில் சத்துருக்களாக தானிருந்தார்கள்.

அன்று முழுவதும் ஒரு மாதிரியாக விளையாடிக் கொண்டும் பேசிக் கொண்டுமிருந்து விட்டு மக்ரிபு தொழுகைக்குப்பின் சாப்பிட்டுவிட்டு சயீதா பானுவிடம் பிரியாத விடை பெற்றுக் கொண்டு நானும் இர்ஷாதும் தம்தம் இல்லத்திற்கு வந்துவிட்டோம். அன்றெல்லாம் விளையாடி பேசிய களைப்பால் அன்றிரவு விரைவில் நித்திரையில் ஆழ்ந்தேன். (தொடரும்)

பன்னிரண்டு மாலை.

இது ஊக்கரை யிலடங்கி மறைந்திரா நின்ற மெஞ்ஞான சொரூபராகிய காமிலொலி ஷெய்க் அப்துல் காதிர் லெப்பை ஆலிம் ஸாஹிபு அவர்களால் பாடியது. இதில் தரீகத்து மாலை, ஹகீகத்து மாலை, மஃரிபத்து மாலை, தவ்ஹீது மாலை, சிர்று மாலை, திக்று மாலை, பிக்று மாலை, உஜூது மாலை, ஷுஹூது மாலை, அதபு மாலை, அறிவு மாலை, பயானுத்தீன் மாலை, ஆக பன்னிரண்டு மாலைகள் சேர்ந்திருக்கின்றன. சுத்த தமிழ் விலை அணா 8

ஷை அறபுத் தமிழ் விலை அணா 14

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ 20, ஹைரோட், திருவல்லிகேணி, மதருஸ் 5.

பாஸோவின் மர்மம்.

(தொடர் கதை 4-வது பகுதி.)

அத்தியாயம் 10

ஒரு பெரிய அறையில் ஜன்னல் வழியாக காலைசூரியக் கிரணங்கள் வீசிக் கொண்டிருந்தன. மூலையில் கை கால் கட்டப்பட்ட ஒருவன் ஒரு மூட்டையைப் போல் அசைவற்று கிடந்தான். அவ்வறையின் கதவைத் திறந்து கொண்டு, கையில் ஒரு பிளேட்டும், ஒரு குவளையுடனும் உள்வந்தான் இன்னொருவன்; வந்ததும் மூலையில் கட்டப்பட்ட மனிதனிடம் சென்று "சாப்பிடும் இதை. கொஞ்சம் பிந்திவிட்டது" என்றான். கட்டப் பட்டுள்ளவன் கஷ்டத்துடன் எழுந்து உட்கார்ந்து "என்னை என்ன செய்யலாமென்று எண்ணம்? ஜேன் எங்கே?" என்றான்.

"அவள் ஓரிடத்தில் சௌக்கியமா யிருக்கிறாள். நீ கவலைப் படாதே. அவளுக்குவேண்டிய சௌகரியங்களை ஒருபெண் செய்து கொண்டிருக்கிறாள்"

"நீங்கள் இவ்வாறு செய்வது போலீஸுக்கு தெரிந்ததும் உங்களுக்கு ஆபத்து! தெரியுமா?"

"எல்லாம் தெரியும். என் செய்வது, எங்களுடைய காரியங்களில் ஏதோ எதிர்பாராத விதமாக நீங்கள் நடுவில் மாட்டிக் கொண்டீர்கள். உங்களை ஒன்றிரண்டுநாள் இவ்வாறு ஒளித்து வைக்க வேண்டிய தேற்பட்டுவிட்டது"

தங்களுக்கு அன்று இரவு நடந்த விஷயங்களை நினைத்து வருந்தினான் டாம். தானும் ஜேனும்இரவில் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போக காரை ஓட்டிக் கொண்டு போகும் போது ரோட்டில் வழியில் ஒரு கார் குறுக்கே நிறுத்தியிருக்க தங்கள் காரை நிறுத்தியதும், இருட்டில் 4-5 பேர்கள் வந்து தங்களை காரைவிட்டு இழுத்ததும், தனது தலையில் ஒரு அடி விழுந்ததும் தனக்கு மயக்க மானதும் ஞாபகம் வந்தது. இந்தவீட்டை உள்ளே பார்த்ததில், எங்கோ இந்தவீட்டை பார்த்த ஞாபக மிருந்தது. "இந்த வீட்டைப் பார்த்திருக்கிறேன்" என்றான் டாம்.

"இவ்வீடு விற்கப்படும் என்ற போர்டை பார்த்திருப்பீர் அந்த ஞாபகம்தான்" என்றான் ஜான்ஸன்.

ஓ! தெரியும் இது டவ்டன் பார்க்" என்றான் டாம்.

"ஆம் அதே தான். இதற்கு மேல்ஒரு கோபுரம் உண்டு. அந்த கோபுரத்தில் ஒருவன் துப்பாக்கியுடன் இவ்வீட்டை காவல் காத்துக் கொண்டிருக்கிறுன். நீ தப்பித்து ஓட முயற்சித்தால் உன்னையும் சுடுவான். சரி, நான் கொண்டுவந்ததை சாப்பிடும்" என்று ஜான்ஸன் சொன்னுன்.

"பின் சாப்பிடுகிறேன். இரவு என் வீட்டுக்கு வந்தவர்களுள் நீயும்வந்தாயா?" என்று டாம் கேட்க, "ஆம் நானும் வந்தேன். ஆனுல்நீ என்னை பார்க்கவில்லை" என்று சொன்னுன் ஜான்ஸன். பின்பு ஜன்னல் கதவுகளை யெல்லாம் திறந்தான். வெளிச்சம் அதிக மாகவே ஜான்ஸனை கூர்ந்து கவனித்து "நீயா! உன்னைத்தான் எனது ஸோபாவில் இறந்து கிடக்கப் பார்த்தேன்" என்று டாம் திகைத்து சொன்னுன். இதைக் கேட்டதும் அவன் "வேடிக்கை எப்படி" என்று சொல்லிக் கொண்டே போய்விட்டான்.

அத்தியாயம் 11

தண்ணீரிலுள்ள மில் சக்கரத்திலுள்ள சவத்தை மிக கஷ்டத் துடன், போலீஸ் ஆம்புலன்ஸ் உதவியினுல் எடுக்க சமார் 3-மணி நேரம் பிடித்தது. மத்தியானம் 2½-மணி சுமாருக்கு சவத்தை மர வராண்டாவின் தரையில் போடப்பட்டது. அந்தச்சவம், கருப்பு ஸூட் அணியப் பட்டிருந்தது. நெஞ்சில் கத்திகுத்து காயம் ஒன் றிருந்தது. அவ்விடத்துக்கு இன்ஸ்பெக்டர் பவுட்ஸூம் வந்து விட்டார்.

"இவன் யார் தெரிகிறதா? எங்கோ பார்த்ததைப்போல் தெரி கின்றது. சரிவர தெரியவில்லை" என்று பவுட்ஸ் கேட்டார்.

"ஜான்ஸன் என்று ஆஸ்ட்ரேலியாவி லிருந்து வந்தவனின் போடோ சில மாதங்களுக்குமுன் பார்த்தேன்! அவனைப் போலிருக் கிறது. ஏதோ ஒரு நில கேஸில் சம்மந்த பட்டவன். அந்தக் கேஸைப் பற்றிய சமாச்சாரம் தினசரியில் பிரசுரமானதை எனது அஸிஸ்டென்ட் சோடே வெட்டி வைத்திருக்கிறுன். அவனுக்கு டெலிபோன் செய்து விசாரிக்கலாம்" என்றுர் ஷம்ஸ்.

"கத்தியால் குத்தியபின் தண்ணீரில் தள்ளியிருக்கலாம்" என்று பவுட்ஸ் சொன்னுர்.

"எந்த விடத்திலிருக்கும்போது இக்கத்திகுத்து பட்டதென்று எனக்கு தெரியும்" என்றுர் ஷம்ஸ்.

"நீங்கள் டாமின் ஸோபாவைப்பற்றி சொல்லிக் கொண்டிருந் தீர்களே, அங்கா?" என்று பவுட்ஸ்கேட்டார்.

"ஆம். இரத்தத்தை துடைக்கவே அம்மருந்தை உபயோகித்திருக்கிறார்கள். அந்த மருந்து கார் ஸீட்களையும் சுத்தம் செய்ய உபயோகமாகும். ஆதலால் இவனைக் கொலை செய்தவனின் காரில் கட்டாயம் அம்மருந்து இருக்குமென நினைக்கிறேன்" என்றார் ஷம்ஸ்.

"டாம் ஜேன் இவர்கள் கொன்றிருப்பார்களா?" என்று பவுட்ஸ் கேட்க, "இல்லை, அதைப்பற்றி நான் யோசிக்கவேயில்லை" என்று ஷம்ஸ் பதிலளித்தார். "ஏன் கொலை செய்திருக்க முடியாது? இவனிடம் அதிகம் பணம் இருந்திருக்கலாம். அவர்களுக்கு ஜீவனம் கஷ்டமாயிருந்தது. இவனைக் கொன்று விட்டு, நம்மை ஏமாற்ற கொஞ்சம் பணத்தை இங்கே போட்டு விட்டு ஓடிப் போயிருக்கலாமே" என்று பவுட்ஸ் சொன்னார். "அவ்வாறு அவர்கள் இவனைக் கொன்று இவன் உடலை ஆற்றில் போட்டபின், தைரியமாக அவர்களின் வீட்டிலேயே தங்கி யிருப்பார்களே! ஓடிப் போகக் காரண மில்லையே" என்றார் ஷம்ஸ். "அவர்களின் காரும் இது வரை அகப்படவில்லை. பாஸோ என்பவன் யாரென்றும் தெரியவில்லை. இந்த மைக் திருட்டுவிழி விழிக்கிறான். இவனை நம்ப முடியவில்லை. நீங்கள் இவனை வேலையாக பக்கத்து கிராமத்திற்கு அனுப்பி யிருக்கிறீர்களே! அப்படியே ஓடிவிடுவானே" என்று பவுட்ஸ் கேட்க, "அவன் ஓடவே மாட்டான். இந்த வீட்டில் எதையோ வைத்து காத்துக் கொண்டிருப்பது போல் தெரிகிறது. இவ்வீட்டை விட்டு போகவே மாட்டான். இவ்வீட்டில் என்ன மறைத்து வைத்திருக்கிறானென்பது எனக்கு தெரியாது" என்றார் ஷம்ஸ்.

"இந்த கொலை கேஸுக்கும் நேற்று நடந்த பாங்க் கேஸுக்கும் சம்பந்தமுண்டா?" என்று பவுட்ஸ் கேட்க "என்னால் தற்போது சொல்ல இயலாது" என்றார். இவ்வாறு இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது சார்ஜென்ட் ஒருவன் வந்து "அந்த சவத்தை சோதித்தோம். ஒன்றும் அகப்படவில்லை. அந்த ஸூட்டில் ஆஸ்ட்ரேலியாவிலுள்ள ஒருதையக்காரன் பெயர் போடப்பட்டிருக்கிறது" என்றான். பவுட்ஸ் ஷம்ஸைப்பார்த்து "அப்படியானால் இவன் ஜான்ஸனாகத்தான் யிருக்கக்கூடும். நீங்களென்ன யோசித்துக் கொண்டே யிருக்கிறீர்கள்?" என்றார். "பாஸோவைப்பற்றிதான் நினைக்கிறேன். இவன் யாராகயிருக்கக்கூடும்?" என்றார் ஷம்ஸ். "அவனைப்பற்றி நான் நினைக்கவில்லை. எனக்கு வேண்டியவர்கள் டாம் ஜேன். இவர்கள் அகப்பட்டால் இந்த கேஸ் முடிந்துவிடும்" என்றார் பவுட்ஸ். "அப்படியானால் பாங்க்கேஸ்?" என்று ஷம்ஸ் கேட்க "அந்த கேஸ் வேறு. அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. அந்த பாங்க்கேஸில் ஸ்டோன் இறந்த விஷயம்தான் முக்கியம். அதுவும் தற்கொலை அல்லது எதிர்பாராத விபத்து என்று தீர்மான

மாகிவிட்டால் கேஸ் முடிந்தமாதிரி" என்றார் பவுட்ஸ். இதற்கிடையில் மைக் திரும்பி வந்ததை ஷம்ஸ் கவனித்தார்.

அத்தியாயம் 12

டாம், ஜான்ஸன் சென்றதும், உட்கார்ந்தவாறு சுவரில் சாய்ந்தான். கையில் கட்டப்பட்ட கயிறை அவிழ்க்க முயற்சித்தான். வெகு சுலபமாக அவிழ்ந்தது. வாசலைப்பார்த்தான். கதவு மூடப்பட்டிருந்தது. எங்கும் நிசப்தம் நிலவியது. காலில் கட்டப்பட்ட கயிற்றையும் அவிழ்த்தான். எழுந்து நின்றான். அதிகநேரம் கால் கை கட்டப்பட்டதால் அவயவங்கள் இரத்த ஓட்டமில்லாமல் மறுத்திருந்ததால், நிற்கமுடியாமல் சுவற்றைத்தாங்கிக் கொண்டு விழுந்தான். தான் விழுந்த சப்தத்தால் யாரும் வருவார்களோ என்று அப்படியே உட்கார்ந்தான். ஆள்நடமாட்ட சப்தமே இல்லை.

நின்று நடக்க சக்தி கொஞ்சம் வந்ததும் மெதுவாக எழுந்து போய் கதவைதிறந்தான். வெளியில் மூடப்படாமல் திறந்தது. யாரும் வீட்டின் வேறுபக்கத்தி லிருக்கிறார்களா வென்று வீடு முழுவதும் சுற்றிபார்த்தான்; யாருமில்லை. வீட்டைகடந்து ஜான்ஸன் சொல்லிய கோபுரத்தருகே சென்று கூர்ந்து கவனித்தான். அங்கும் யாதொரு சப்தமுமில்லை. கோபுரத்தின் படிகளில் மெதுவாக ஏறினான். கோபுரத்திலும் யாருமில்லை என்று அறிந்து கீழே யிறங்கினான்.

அங்கிருந்து ஒரே ஓட்டமாக ஓடி கொஞ்ச தூரத்திலுள்ள ஓர்மரத்தின் பக்கத்தில் ஒளிந்து நின்றான். தான் ஓடிவந்தசப்தமே தவிர வேறு சப்தமேகேட்கவில்லை. வெளியிலிருந்த காம்பவுன்ட் கேட்டுக்குவந்தான். அந்த கதவும் திறக்கப்பட்டிருந்தது. அதையும் கடந்து ரோட்டுக்கு வந்தான். அங்கு வந்ததும் ஓட ஆரம்பித்தான். கொஞ்சதூரம் ஓடிப்போகும் போது, எதிரில் ஒரு கார் வருவதைப் பார்த்து, நிற்பாட்டுமாறு சைகை செய்தான். அந்த காரை ஓட்டி வருபவன் அந்த ஊரில் துணி சலவை கம்பெனிவைத்துள்ளான். அவன் டாமைப்பார்த்ததும் காரை நிற்பாட்டி "டாம்! இங்கு என்ன செய்கின்றாய்" என்றான் ஆச்சரியத்துடன்.

"சீக்கிரமாக போலீஸ் ஸ்டேஷனுக்கு போகவேண்டும்" என்று டாம் சொல்ல காரில் ஏற்றிக்கொண்டு, "உன்னைத்தான் தேடிக்கொண் டிருக்கிறார்கள் போலீஸ்" என்று சொல்லி, சீக்கிரமாக போலீஸ் ஸ்டேஷன்முன் இறக்கினான். டாம் போலீஸ் ஸ்டேஷனுள் சென்றதும் அவனைப் பார்த்த சார்ஜென்ட் அப்படியே திகைத்துவிட்டான். "டாம் தானே!" என்றான் "ஆம்! ஜேனைப் பற்றி சமாச்சாரம் ஏதாவது கிடைத்ததா?" என்று பதைப்புடன்

கேட்டான். "ஜேனைப்பற்றி தகவல் கிடையாது" என்றான் சார்ஜன்ட். இவ்வாறு பேசும்போதே அங்கிருந்த கான்ஸ்டேபிள் டாமுக்கு பின்னால்போய் வாயலருகே நின்று கொண்டான்.

"என்னை பிடித்து வைத்திருந்தார்கள்" என்று டாம் சொல்லத் துடங்கவே, "என்னிடம் இதெல்லாம் சொல்ல வேண்டாம். இன்ஸ்பெக்டரிடம் சொல்லவும்" என்று சார்ஜென்ட் சொன்னான். இன்ஸ்பெக்டர் எங்கே என்று கேட்க கொஞ்ச நேரத்தில் வருவாரென்றும் சொன்னான். சார்ஜென்ட் தனக்கு பழக்கமானவராயிருந்தும் ஒரு அன்னியருடன் பேசுவதைப்போல் தன்னிடம் பேசுவதையறிந்த டாம் "என்ன விஷயம் சார்ஜென்ட்? ஒரு மாதிரியாக பேசுகிறீரே" என்று கேட்டான். "உன்வீட்டில் ஒரு கொலை இரவு நடந்ததாகவும் அதைப்பற்றி உன்பேரில் ஒரு வாரண்ட் யிருக்கிறது" என்றான். "என்ன! என்னைபிடிக்கவா வாரண்ட்! நான் யாரையோ கொன்றதாக நினைக்கிறார்களா? ஆனால் நான் என்வீட்டைவிட்டு வெளியில் வந்ததே அவ்விஷயத்தை உங்களிடம் தெரிவிக்கத்தானே! என்னை டவ்டன் பார்க்கில் பிடித்து வைத்திருந்தார்கள்" என்றான் டாம்.

"டவ்டன் பார்க்கில் பேய் பிசாசு யிருப்பதாக கதைகள் கேட்டிருக்கிறேனே! அதை ஏதோ ஆபீஸாக உபயோகப்படுத்த யோசித்தபின், இந்த பேய் பிசாசு கதைகளைக் கேட்டு அதை அப்படியே உபயோகிக்காமல் வைத்திருப்பதாகவும் கேள்வி. சரி அதிருக்கட்டும் உன்து பசு முதலியவைகளை மிருகபாதுகாப்பு சங்கத்தில் ஒப்புவித்திருக்கிறது. நீ அவைகளைப்பற்றி கவலைப்பட வேண்டாம். இங்கே கொஞ்ச நேரம் யிரும்" என்று சார்ஜென்ட் சொல்லி வெளியில் போனான்.

கொஞ்ச நேரத்திற்குப் பின், சார்ஜென்ட், இன்ஸ்பெக்டர் பவுட்ஸ், துப்பறியும் ஷம்ஸ் மூவரும் ஸ்டேஷனுள் வந்தார்கள். பவுட்ஸும் ஷம்ஸும் டாம் கோபத்துடன் நிற்பதை கவனித்தார்கள். "என்னை இரவெல்லாம் கைதியைப்போல் பிடித்து வைத்திருந்தார்கள். அங்கிருந்து தப்பித்துகொண்டு ஜேனைப் பற்றி விசாரிக்க இங்கு வந்தால், என்பேரில் வாரண்ட் இருப்பதாக சொல்லி, இங்கேயே யிருக்குமாறு இவர்கள் சொல்லுகிறார்கள். இவ்விஷயமே புரியவில்லை" என்று டாம் சொன்னான். "உன்னை எங்கு பிடித்துவைத்திருந்தார்கள்" என்று பவுட்ஸ் கேட்டார். தன்னை பிடித்துவைத்தது டவ்டன் பார்க்கிலென்றும், தனக்கு சாப்பாடுவகைகள் கொடுத்தவன் ஜான்ஸன் என்றும் டாம்

சொன்னான். எங்களுடன் வாருமென்று பக்கத்து அறைக்கு டாமைக் கூப்பிட்டுச்சென்று அங்கு ஒரு பெஞ்சின் பேரில் மூடப்பட்டிருந்த துணியை நீக்கி அங்கு கிடக்கும் ஒரு சவத்தை டாமுக்கு காண்பித்தார்கள். அதைப்பார்த்ததும் திகில் பிடித்தவன் போல் பின்வந்தான்.

"இவனைப் பார்த்திருக்கிறாயா?" என்றுபவுட்ஸ் கேட்டார். டாமுக்கு தலை சுற்றியது. வாய் குழறிக்கொண்டே "ஆம் பார்த்திருக்கிறேன். இவன்தான் இரவு எனது சோபாவில் கொல்லப்பட்டு கிடந்தான்" என்றான். "இவன்தான் ஜான்ஸன் என்று நாங்கள் நினைக்கிறோம்" என்றார் ஷம்ஸ். "ஆம்! எனக்கும் தெரியும். இவன்தான் ஜான்ஸன்" என்றுடாம் சொன்னான். "உன்னைப் பிடித்துவைத்து சாப்பாடுகொடுத்தவன் ஜான்ஸன் என்றுசொன்னாயே!" என்றுபவுட்ஸ் கேட்க, "ஆம் அதுவும் இவனேதான். நீங்கள் என்ன நினைத்தாலும் நான்உண்மைதான் சொல்லுகிறேன்" என்றுடாம் சொன்னான். "நீ கொஞ்சநேரம் ரெஸ்ட் எடுத்துக் கொண்டு பின்பு எங்களுக்கு உனக்கு தெரிந்ததை சொல்லு" என்று பவுட்ஸ் சொன்னார். (தொடரும்.)

முட்டை கேக்

கோழி முட்டை 6, சர்க்கரை 6 டேபிள் ஸ்பூன், மைதாமாவு 12 டேபிள் ஸ்பூன், எலுமிச்சம் பழம் 1 பெரியது, வெனிலா எஸென்ஸ் 12 துளி, ஆப்பம் சோடாமாவு (Baking Powder) 1 சிட்டிகை, ஜாதிக்காய்தூள் ¼ சிட்டிகை, நெய் 4 டேபிள்ஸ்பூன், முந்திரிபருப்பு ¼ பலம், கொடிமுந்திரிபழம் ¼ பலம்

முட்டைகள் 6யையும் உடைத்து மஞ்சள்கரு வேறு, வெள்ளைக் கரு வேறாக இருபாத்திரங்களில் ஊற்றவும். அப்பாத்திரங்களில்

தண்ணீர் கொஞ்சமுமில்லாமல் துடைத்து வைத்திருக்கவேண்டும். வெள்ளை கருவை, முட்டை அடிக்கும் கருவியினால் நன்றாக அடிக்கவும். சோப் நுரையைப்போல் கெட்டியாக வரும். அதில் 6டேபிள் ஸ்பூன் சர்க்கரையை போட்டு, இன்னும் அடிக்கவும். சர்க்கரை கரைந்தபின் எலுமிச்சம்பழம்சார் ஊற்றி அடிக்கவும். பின்பு எஸன்ஸ், ஜாதிக்காய்தூள், ஆப்பப்சோடாமாவு (Baking Powder) இந்த மூன்றையும் அதில்போட்டு இன்னும் அடிக்கவும். பின்பு மஞ்சள் கருவை அதில்போட்டு அடிக்கவும். பின் ஆறின நெய்யை போட்டு (நெய்யை இளக்கவேண்டாம்) அடிக்கவும். கடைசியாக மைதாமாவைப்போட்டு மெதுவாக கிளரவும் (அடிக்கக் கூடாது)

ஒரு அலுமினிய பாத்திரம் அல்லது ஒரு டின் எடுத்துக் கொள்ளவும். பட்டர் பேபரில் நெய் தடவி அந்த பாத்திரம் அல்லது டின்னில் உள்புரம் பூராவும் வைக்கவும். நெய் தடவியபக்கம் பாத்திரத்தில் படக்கூடாது. அந்த பட்டர்பேப்பர்வைத்த பாத்திரத்தில், மேலே அடித்துவைத்த முட்டை சாமானை அள்ளி போடவும் மேலே முந்திரிபருப்பையும் கொடிமுந்திரி பழத்தையும் தூவவும்.

ஒரு மண்பாத்திரத்தில் மணல் (சுமார்2படி) போட்டு அடுப்பிலேற்றி தீயெரிக்கவும் மணல் நன்றாக சூடானபின் அதன்பேரில் மேலேசொல்லிய பாத்திரம் அல்லது டின்னை, மணலில்பதிய வைத்து, பாத்திரத்தைமூடி, அந்த மூடியின்பேரில் நெருப்புப் போடவும் அடுப்பிலுள்ளஎரியும் விறகுகளை எடுத்து விடவும். நெருப்புமாத்திரம் இருக்கவேண்டும். சுமார் ¾மணி நேரத்திற்குப்பின் ஒரு சிறிய குச்சியெடுத்து பாத்திரத்தில் தயாராகியிருக்கும் கேக்கில் கடைசிவரை குத்திப்பார்க்கவும். குச்சியில் மாவுவகை ஒட்டிக் கொண்டிருந்தால் இன்னும் 10 நிமிஷம் அடுப்பிலேயே வைத்து பிறகும் குச்சியிட்டுப்பார்க்கவும். குச்சியில் ஏதும் ஒட்டாதிருந்தால் அருமையான கேக் தயாராகிவிட்டது.

தொழாதோருக்கு "அதபு மாலை"யின் சவுக்கடி.

(நாகூர் K. E. S. ஸாஹிபு)

'வெளிரங்கமாக நாங்கள் தொழாமலிருந்தாலும் அந்தரங்கமாக மனதுக்குள்ளால் தொழுகிறோம்' என்றுரைக்கும் போசனப் பிரியனை அந்த மூடனைக் கேளுங்கள்...... "உனது மனைவியுடன் சேர்க்கை செய்வதாக மனதால் நினைத்துக் கொண்டாயேயானால் போக சுகம் நிறைவேறிவிடுமோ? அந்த நினைப்பாலேயே அவள் மக்களை பெற்றுவிடுவாளோ? வாயால் ஆகாரம் அருந்தாமல் மனதால் ஆகாரம் அருந்துவதாக நினைப்பதனால் பசி தீர்ந்துவிடுமோ? நெசவின்றி, மனதால் நினைக்கும் நினைப்பாலேயே பிடவை கிடைத்திடுமா?" என்று. இந்த சத்திய இஸ்லாமிய மார்க்கப் பயிரை விளைத்த நபிநாயகம் (ஸல்) தன திருபாதங்களும் சுரந்து வீங்க நின்று வணங்கவில்லையா? பொன்போன்ற வதனமுள்ள மகத்துவமிக்க பெரியார் முஹிய்யத்தீன் அப்துல்காதிர் ஜீலானி (றலி) நின்று வணங்கவில்லையா? முஸ்லிம்களது சொந்த அடையாளமான தொழுகையை விட்டிருந்தோரை, தூய நபிநாயகம் (ஸல்) போர் செய்து வெட்டி வீழ்த்தவில்லையா? எனவே, தொழுகையை விட்டு வழி கெட்டுப்போன இந்த பொல்லாத போலி ஞானிகளுடன் இணங்கி சகவாசிப்பவர்களும் வழிகேடர்களே யாவர். எனவே, இத்துஷடர்களை கண்டாலும் தூர விலகவேண்டும்.

'அல்லாஹு...யாஹு—யாஹுக்கு' என்று சில சொற்களை ஏற்படுத்தி வைத்துக் கொண்டு, தொழுகை, நோன்பு, ஜகாத்து, ஹஜ்ஜு முதலிய எல்லாமிதற்குள் அடங்கிப் போயிற்று; ஆகவே, இந்த நமது ஸிக்ரைத்தவிர வேறு வணக்கங்கள் செய்யத் தேவை இல்லை. ஹக்கிடம் மிகச்சிறந்த ஸிக்ரும் இது' என்று தங்களது முரீதுகளிடம் கூறி பொருத்தக் கேடான முறையில் அந்த ஞானிகள் தாங்களும் வழிகெட்டு மற்றவர்களையும் வழிகெடுத்து விட்டார்கள். ஆகவே, போலி ஞானிகளின் சொற்களை நம்பி இம்மையிலும், மறுமையிலும் வழிகெட்டு போகாமல்—இன்றே ஐந்து வக்து தொழுகையை நிறைவேற்றி வருவீர்களாக.

சோகச் சுவடு!

(வேளாங்கண்ணி-சாந்திதாஸன்)

"காஹிர்! என்னப்பா! கலைசொட்டும் உன்முகத்திலே காடுமுற டானச்சுவடுகள் காணப்படுகின்றன ?" என்ற கேள்வியினை வீசிக் கொண்டே அங்குள்ள அறை ஒன்றில் மிக அவசரமாக நுழைந்தான் காசிம். அவனது அத்தகைய திமர் விஜயத்தையும், ஆர்ப் பறித்தெழுந்த அந்த அனுதாபக்கேள்வியினையும் காஹிர் கடுகள வேனும் அப்பொழுது எதிர்ப்பார்க்கவேயில்லை. கண்ணீர் கடலிலே கரைப்புரண்டு வந்துக் கொண்டிருந்த துயர அலைகளின் மத்தியிலே தத்தளித்துக் கொண்டிருந்த அவன், கட்டாயப்புன்முறுவல் படகினை கட்டிப்பிடித்து தாவி கரை சேரமுயன்றான். ஆயினும் காலக்காற்று மீண்டும் அவனை அக்கடலிலேயே கதறி வீழ்த்தி விட்டது.

"காசிம்! காரணம் வேறுகூறவேண்டுமா? சட்டக்கல்வி பயின்றேன், ஏதேனும் பட்டம், பதவி கிடைக்குமென்றெண்ணி. அந்த பாழாப்போனபடிப்பு இன்று வரையில் பயனளிக்கவில்லை. அவற்றிற்கு நேர் மாற்றமாக பராமுக பள்ளத்தாக்கில் என்னை தூக்கி எறிந்து விட்டது. வயோதிக அன்னை, தந்தையின் வாழ்க்கை வளமாக ஒரு வழிவகுக்கமுடியவில்லையே என்று தான் வருந்து கின்றேன்" தன்நிலைத்தளர்ந்த வகையிலே மேற்கூறியவற்றை ஒரே மூச்சில் உளறிக்கொட்டினான் காஹிர். செவியுற்ற காசிமின் இதயத்திலே சிற்றத்துளிகள் சிதறிவிழுந்தன.

"காஹிர்! உன்னை ஒரு இதயமற்ற இழிவாளன் என்றுதான் கூறவேண்டும். பட்டம் என்ற பதவுரை நம் போன்ற முஸ்லிம் வர்க்கத்திற்கு ஓடி மறையும் ஒளிக்கிரணத்திற்கு ஒப்பானதாகும். அது அந்தணர்களுக்கே அலாதியான ஒரு அரியாசனம்! அணித்தானதும் கூட்வர்த்தகத் தொழிலே நம் வாழ்விற்கு ஓர் சிறந்த வழிகாட்டி!! கற்றறிந்த உனக்கு கருத்துரை தரவேண்டிய அவசியமில்லை. வள்ளல் சீதக்காதியின் வரலாற்றினை சிறிது வருடிப்பார். வர்த்தகத்துறையே அவரை வளம் கொழிக்கச் செய்தது. எம் பெருமானார் (ஸல்) அவர்களின் எளியவாழ்க்கையின் முதற் பணியை எண்ணிப்பார். அதுவே அவர்களை அன்பொழுக ஆரம்பமாக வரவேற்றது. பொன்செய்யும் மருந்தை பொடம் போட்டுவிட்டு கண்ணீரை சிந்துகின்றாய்? ஆங்கி[illegible]ன்னை தாங்குவதற்கில்லை. அது ஒரு பாங்கான பகல் [illegible] அ[illegible]கரிகளிடம் முத்தம் கொஞ்சும்! பணக்கார[illegible]வ[illegible]த்திலே, பாது[illegible]லே பரமாகசிய

187019

மாக பட்டாடை விரித்தபஞ்சணையிலே படுத்துக்கொண்டு பல்லிளிக்கும்! காராகிரகத்திலே தீரமாகப் பேசி தன்னை தப்பிக்கொள்ளும்! கொள்ளையடித்து கோட்டை யணிந்துக் கொண்டு நல்ல விதமாக நான்கு பெயர்கள் பார்வைக்கு உல்லாசயாத்திரை செய்யும்! நம் போன்றவறுமை யோர்களுக்கு அதுனவரியாகவே உறுமாறிவிடும்!”

காசீமின் கனல்தெறிக்கும் வீருடையகியதிகளின் கண்ணோட்ட சித்தாந்தம் இம்மட்டோடு நின்றது. அதுகாறும் சிந்தனைச்சிற்பிகளோடு வர்த்தகவனிலைதயர்களிடம் வாக்குறுதி செய்துக் கொண்டிருந்த காஹிர், ஒரு முடிவுக்கு வந்தவனாக “காசீம்! கருணையின் அவதாரம் நீ. கருத்துரைப்பல காட்டி, என்வாழ்வை திருத்தியமைத்து விட்டஉனக்கு கைமாறு என்ன செய்வேன்! அனுபவரிதியாக அன்றுடம் அகப்பட்ட உண்மைகளை ஆதாரப்பூர்வமாக அலசிக்காட்டிய உன்திறமையினை போற்றுகின்றேன்” என்ற புகழுரை காஹிரின் தொனியிலிருந்து ஆர்வம்கலந்தவாறு சூழ்கொட்டி எழுந்தது.

“வீழ்ந்த ஒருவனை ஏந்துவதற்கு வெகுமதியை விரும்புவதல்ல நம்வீர இஸ்லாத்தின் இலட்சியம்! எத்தனையோ உத்தம சோதரர்களின் ஈரல்களை எடுத்து கடித்துக் காண்பித்த இராக்ஷசர்களை கூட இம்சிப்பதல்ல நம் இணையற்ற இஸ்லாத்தின் இலட்சியம்! ஒட்டகத்தோல்களிலே பிணைத்து தினகரனின் தீர்ப்புக்கு தெருவில் தள்ளியும் கட்டளையினை கடப்பதல்ல நம் காருண்ய இஸ்லாத்தின் இலட்சியம்! புகழினைகோரி பணிபுரிவதல்ல நம் புதுமை இஸ்லாத்தின் இலட்சியம்! வாள்வலிமை யினைகண்டு தோல்வலிமைக்கு துஞ்சுவதல்ல நம் தெய்வீக இஸ்லாத்தின் இலட்சியம்! எனவே, வர்த்சகத்துறையே நம்மை வாழ்விக்கவகைபுரியும். அதற்கு ஒரு அரிய ஆலோசனை அறைகின்றேன் கேள்! சற்றுமுன்னதாக தான் மலாயாநாட்டிலிருக்கும் எனது தந்தையாரிடமிருந்து என்முகவரிக்கே ஐம்பதுரூபாய் மணியாடர் வாயிலாக வந்திருக்கிறது. அதைப்பயன்படுத்தியவாறு நம் இல்லத்திற்கு அருசாமையிலேயே ஒருசிறு கிற்றுக்கொட்டகையை நிர்மாணித்து சிறிய அளவில் மளிகை சாமான்களை வாங்கி வர்த்தகத்துறையிலே முதன்மையாக இறைவனை எண்ணித் துதித்து இறங்குவோம். எதிர்காலம்நமக்கு ஏற்றதோர்வழியினை செய்தே தீரும்” யென்னும் திடசங்கற்பத்தினூடே அமைதியாக முடித்தான் காசீம். தான் கலக்கமுற்ற வமயத்திலே கைகொடுத்துதூக்கி நிறுத்திய நண்பனை தன்னகத்தே அணைத்துக் கொண்டான் காஹிர்.

ஓராண்டு, ஈராண்டு, மூன்றுண்டுகளும் மோதிச் சென்றன. கடைத்தெருவின் வழியாக செல்வோரின் கவன மெல்லாம் அந்

குள்ள ஒரு அழகிய கட்டிடத்தின்பக்கல் இழுத்துச்சென்றன. அவற்றின் முகப்பிலே "காசீம் காஹிர் அண்டு கம்பெனி" என்று ஒய்யாரமாககொட்டை எழுத்துகளாலே பொறிக்கப்பெற்றிருந்தது. ஆம்...சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் ஐம்பது ரூபாய் மூலதனத்தினூடே ஆரம்பிக்கப்பட்ட அந்த சிறுகீற்றுக் கொட்டகைதான் இன்று அனைவரும் பிரமிக்கும் வகையிலே ஐம்பதினாயிரம் ரூபாய்களுக்கு மளிகைசாமான்கள் மூட்டை, மூட்டையாக நிறைந்து காணப்படும் "காசீம், காஹிர் அண்டு கம்பெனி" ஒற்றுமைப்பாதையிலே ஐக்கியமாகி விட்ட அவ்விருவர்களின் தூயவாழ்க்கையின் புதிய சகாப்தம் புரண்டு விட்டது. மாசற்ற முயற்சியின் முக்கியத்துவம் மகத்தான வெற்றிக்கு வழிகோலி விட்டது.

"தண்டலை" என்னும் ஒரு வில்லேஜ் வட்டத்திலே இரு பெரும் தரித்திர பரம்பரையிலே தோன்றியவர்கள் தான் காசீமும், காஹிரும். காசீமின் தந்தை அப்துல்லாவோ ஐந்து ஆண்டுகளாக கடல் கடந்துச் சென்று சம்பாதிக்கின்றார். எனினும், போதிய பொருள் திரட்ட இயலாத அளவில் புலம்புகின்றார். காஹிரின் தந்தை அப்துல் கரீமோ தனது காணிநிலச் சொத்தாகிய வெற்றிலை கொடிக்கால் கட்டியழுதவண்ணம் கஷ்டமுறுகின்றார். காஹிரோ பருவகாலத்தே தங்களுக்கே ஆரம்ப ஆஸ்த்தியாக உரித்தான கொடிக்கால் வறுவாயிலிருந்து ஓரளவு முயன்று "மெட்ரி குலேஷன்" வரையில் மிகைப்புற பூர்த்தி செய்துக் கொண்டான். தந்தையாரின் தள்ளாமையினை காணசகியாத அவன் வேலைக்கோரி வெகுதூரம் சென்றும் வெற்றிக் கிடைக்காத நிலையிலே கண்ணீரால் காலம் கழித்தான். அமைதியான போக்கும், அழகும் உடைய அவனுக்கு இந்த அறிவகத்திலே அவலம் தட்டியது பெரும் விந்தைதான்.

காசிமோ, கல்வி அபிவிருத்தியோடு மட்டுமின்றி, சாந்தம், சமத்துவம், சகோதரத்துவம், பொதுநலம் இன்னோரன்ன சாந்தி சன்மார்க்க சமுதாயத்தின் சாமுத்திரிகா லட்சனத்தினூடே, சீர்திருத்த செம்மலாக திகழ்ந்தான். உத்வேகம், தன்னம்பிக்கை, முன்னேறும் துணிவு முதலிய ஆற்றலின் பயனாக—இன்னலுற்ற இரு குடும்பங்களை இன்புற வைத்தும் செல்வந்தர்களாக காஹிரும், காசிமும் இன்று வர்த்தக வாழ்விலே விளங்குவது விந்தைக்குரிய விஷயமல்ல.

மனிதக் கொள்கைகள் தனி இன்பத்தை தந்துவிடுவது இயற்கையே. எனவே அன்று அகில அரங்கிலே, "கடமை-செய்தல்" கிட்டாத கவலை நாடகத்தில் கண்ணீர் சிந்தும் கட்டத்தில் கஷ்ட்ட

மாக நடித்துக் கொண்டிருந்த காஹிரும், காசீமும் ஒன்றித்த ஒழுக்கங்களுடன், இன்று செல்வந்தர் வேடத்தினை செம்மையாக தாங்கி எவ்விதம் நன்கு நடிக்கின்றனரோ, அதே போன்று அரும்பணியாற்ற அரிய இஸ்லாம் அரங்கிற்கு இன்று ஆயிர மாயிரம் யெழுச்சி பொங்கும் இளவல்கள் தேவை.

வஸந்தம் வாரி இறைக்கும் மாலைவேளை காசீம், காஹிர் அண்டு கம்பெனி, யிலே கடுமையாக வியாபாரம் நிகழ்ந்துக் கொண்டிருந்தது. கணக்கெழுதிக் கொண்டிருந்த காசீம் கல்லாவில் களிப்புத் தவழ வீற்றிருந்த காஹிரைப் பார்த்து, காஹிர்! உன் வாழ்வை வேகவைத்த "சோகச் சுவடு"; மறைந்துவிட்டதா? என்றான். "ஆம்... நண்பா!" என்று அன்பாக பதிலளித்தான் காஹிர்.

வெளி வந்து விட்டது! புதிய பதிப்பு!

இரத்தின விலாசம்
நஸீஹத்துலாசம்.

அல்லாஹ், றஸூலைக் கொண்டு ஈமான் கொண்ட ஒவ்வொரு முஸ்லிமும் படித்தறிந்து அமல் செய்ய வேண்டிய அருமையான நூல் இது. பிரபல இஸ்லாமிய அரபு கிரந்தங்களாகிய கஜானத்துல் அஸ்ரார், ஷிர்ஹத்துல் இஸ்லாம், ரத்துல் முக்தார், துர்ரத்துன் நாஸிஹின் முதலிய கிதாபுகளி லிருந்து திரட்டி யெடுத்தெழுதப்பட்ட அருமையான நஸீஹத்துகளும், மஸ்அலாக்களும், ஹதீதுகளும், ஹிக்காயத்துகளும் நிறைந்த நூல் இது. ஒவ்வொருத்தருடைய கையிலும் இருந்து தீரவேண்டிய கிதாபு. தமிழ் முஸ்லிம்களுக்கு இன்றியமையாத நூல். இதன் அருமை நேரில் பார்த்தால் தெரியவரும்.

சுத்தத் தமிழ் விலை ரூ. 1-8-0

கிடைக்குமிடம் :—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

டிரையல் பார்த்தல்.

ஜர்மனியின் ஒரு சிறு பட்டணத்தில் ஒரு மோட்டார் ஸைகில் கடைக்காரர் கோனர் என்பவர் உள்ளே உட்கார்ந்துக் கொண்டிக்கும் போது தனது கடையின் முன்னால் இருவர், ஒருமனிதன் ஒரு ஸ்திரீயுமாக, கடைக்குமுன் நின்று ஏதோ பேசினார்கள். பிறகு அம் மனிதன் கடைக்கு உள்ளே சென்று அங்கு இருந்த ஒரு மோட்டார் ஸைகிளை பரிசோதிக்கத் தொடங்கினர். அப்போது கோனர் வந்தவரிடம் "என்ன தேவை" யெனகேட்டார். வந்தவர், "இதை ஓட்டிப்பார்க்கலாமோ?" என்றார். கோனார், "நீங்கள் இதை திருப்பி கொண்டு வருவீர்கள் என்று என்ன நிச்சயம். இவ்வாறு சொல்வதால் வருத்தப்படாதீர்கள். நீங்கள் என் இடத்தில் இருந்தால் என்ன செய்வீர்கள் என்று பாருங்களேன்" என்றார். வண்டி வாங்க வந்தவர், "அதற்கு பயப்பட வேண்டாம். நான் உங்களுக்கு செக்கூரிடி கொடுக்கிறேன். அதோ நிற்கும் என் மனைவியை செக்கூரிடியாக நான் வரும்வரை வைத்து விட்டுப் போகிறேன்" என்றான்.

கோனார் அதைக் கேட்டு மனத்திற்குள் இவன் கொடுக்கும் செகூரிடி கதை புஸ்தகங்களில் சொல்லப்பட்டது போல் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டு மோட்டார் ஸைகிளை வெளியே எடுத்து ஓட்ட அனுமதி கொடுத்தார். வண்டி வெளியே எடுத்துச்செல்லப்பட்டு ஸ்டார்ட் செய்யப்பட்டு, வந்தவர் வண்டியை ஓட்டிக் கொண்டு போனார்.

கோனார் கடைமுன் நிற்கும் ஸ்திரியை அறையில் உள்ளே உட்காரச் சொல்லலாம் என நினைத்து பார்த்தார். அந்த ஸ்திரியைக் காணோம். ஆனால் அந்த ஸ்திரி மெதுவாக நடந்து செல்வதைக் கண்டு அவளிடம் ஓடி, "நீங்கள் எங்கம்மா போரிங்க. உங்கள் புருஷன் வரும்வரை உள்ளே உட்கார்ந்திருங்கம்மா?" என்றார். அவள் கோபத்துடன் "புருஷனா?" என்றாள். கோனார் அவளிடம் "உங்களை இங்கு வைத்து விட்டுத்தானே உங்களுடன் வந்தவர் வண்டியை எடுத்துக் கொண்டு போய் இருக்கிறார். அவர் உங்களை அவர் மனைவி என சொல்லி விட்டல்லவா போய் இருக்கிறார்" என்றார். அப்போது, அந்த ஸ்திரி, "அவர் எனக்கு தெரியாது. உனது கடையை காட்டு என என்னிடம் கேட்டார். நான் காண்பித்தேன். ஏதோ வண்டி வாங்கப் போவதாக சொன்னார் சற்று நேரம் அங்கு நின்று பார்த்தேன். அவ்வளவுதான்" என்றாள். மோட்டார் வண்டியை எடுத்துச் சென்றவர் இன்னும் திரும்பவில்லை ஆனால் அந்த ஸ்திரி சொல்வது உண்மை யென தெரிய வந்தது.

லைலா மஜ்னூன்.

அரபு தேச சர்தாருடைய அருமைக் குமாரனுகிய மஜ்னூனென்னும் வாலிபன், அழகில் சிறந்த லைலா என்னும் ஒரு பெண்ணரசி பேரில் காதல் கொண்டு, ஒருவரை யொருவர் நேசித்து பலதுன்பங்களுக்கு இலக்காகி, இறுதியில் சந்திக்கும் வரை நடந்துள்ள சரிதை இது. உர்து பாஷையில் லைலீ மஜ்னூனென்னும் பெயர் பெற்ற காவியமாகி விளங்கி வந்ததை தமிழ் பாஷையில் மொழி பெயர்த்து அருமையான நாவலைப்போல் வசன ரூபமாய் அமைக்கப் பட்டிருக்கிறது.

விலை ரூ. 1–4–0

தற்கலை பீர்முஹம்மது ஒலியுல்லா அவர்கள்

திருவாய் மலர்ந்தருளிய

ஞானக் கோர்வை.

இதில் மேற்படி ஒலி நாயகமவர்கள் அருளிய பிஸ்மில் குறம், ஞானப்பால், ஞானப்பூட்டு, ஞானப் புகழ்ச்சி, ஞானமணிமாலை, ஞானக்குறம், ஞானரத்தினக் குறவஞ்சி, ஞான ஆனந்தக்களிப்பு, திருமெஞ்ஞான சாநூல், ஞான முச்சுடர்ப் பதிகம் முதலியன அடங்கி யிருக்கின்றன.

கலிகோ பைண்டு விலை ரூ 3–12–0

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!

காமில் ஒலி ஹஸரத்

அபூபக்கர் ஷிப்லி (றலி) ஜீவிய சரித்திரம்.

தௌஹீத் என்னும் ஏக தெய்வத்துவத்தை அறிய, சுக போகங்களை விட்டு பக்கிர் கோலம் கொண்டு ஹக்கைக் கண்ட மஹான் ஷிப்லி (றலி) அவர்கள் ஞான மார்க்கமான தஸவ்வுபுடைய தீர்க்கத்தைக் கண்டறிந்த வரலாறும் அவர்கள் புரிந்த போதனைகளும் அவர்களின் ஜீவியமும் அடங்கியது.

விலை ரூ 1–12–0

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,

நெ 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

விகடத் துண்டுகள்.

மேடையில் பேசும் ஒரு ஸ்திரீ: கணக்கெடுத்துப்பார்த்ததில் பைத்தியக்கார ஆஸ்பத்திரிகளில் ஆண்கள்தான் பெண்களைவிட இரண்டு பங்கு அதிகமாக இருக்கிறார்கள்.

அந்த சபையில் கடைசியில் உட்கார்ந்திருந்த ஒருவர்: சரி, சரி, அவர்களை அங்கு அனுப்பியது யார்?

சிறுபையன் (தனது தகப்பனிடம்): எங்கள் வகுப்பில் நான் தான் சிறந்த பையன். எங்கள் உபாத்தியாயர் "ஒரு நாய்க்கு எத்தனை கால்கள்?" என்றுகேட்டார். நான் "மூன்று" என்றேன்.

தகப்பனார்: ஆனால் அது சரியில்லையே.

பையன்: நான் தவறுதலாக இருக்கலாம். ஆனால் என் வகுப்பில் மற்ற பையன்கள் சொன்னவைகள் எல்லாவற்றையும் விட நான் சொன்னதிலே தான் தவறுதல் குறைவாம்.

உபாத்தியாயர்: பிளாட்டிங் பேப்பர் என்றால் என்ன?

பையன்: பேனாவில் எழுதிய உடன் இங்கி காயும் வரை தேடுவோமே, அதுதான் பிளாட்டிங் பேப்பர்.

இரெயில் வண்டியில் ஒரு சீட்டுக்குகீழ் ஒருமனிதன் சுருண்டுக்கொண்டுஒளிந்திருப்பதை டிக்கெட் செக் செய்பவர் கண்டு அவரிடம் டிக்கெட்கேட்டார். அதற்கு அவர் "நான் ஒரு ஏழைக்கிழவன். எனது மகளுக்கு வேறு ஊரில் கலியாணம் நடக்கப்போகிறது. நான் கலியாணத்திற்கு போகிறேன். நான் மற்ற பிரயாணிகளுக்கு எவ்வித தொந்தரவும் கொடுக்கமாட்டேன்" என்றார். டிக்கெட் செக் செய்பவர் மனமிறங்கி அவரை விட்டு நகர்ந்து சென்றபோது வேறு ஒரு சீட்டுக்கு அடியில் மற்றொருவர் ஒளிந்திருந்தார். அவர், "நான் தான் மாப்பிள்ளை" என்றார்.

சிறுமுயல் (தாய் முயலிடம்) : அம்மா 7, 532, 475-ஐயும் 2, 375, 532-ஐயும் பெருக்கினால் எவ்வளவு?

தாய்முயல்: எனக்கு தெரியாது.

சிறுமுயல்: அப்போ ஏன் முயல் சீக்கிரம் பெருக்கும் என்று சொல்லுகிறார்கள்.

மானேஜர் (கேஷியரிடம்) : கொஞ்ச நாட்களாக சிலதொகை பணம் காணாமல் போவதை பார்த்துக் கொண்டு வருகிறேன்.

புருஷன் (மனைவியிடம்): உன் தாயாரைப்போன்ற ஒரு சொற்ப வஸ்துவைப்பற்றி தகராறு செய்துக் கொண்டிருப்பது நம் முட்டாள் தனமல்லவோ.

(புதிதாக கார் ஓட்டக் கற்றுக்கொள்பவரிடம்) : "கார் எப்படி ஓட்டுகிறீர்கள்?"

"நல்ல ஓட்டுகிறேன், நேற்று 50 மைல் வேகத்தில் ஓட்டினேன். இனி எதிரில் வேறு கார் வந்தால் கண்ணை திறந்து பார்க்கப் போகிறேன்"

பையன் (தகப்பனிடம்) : புதிதாக ஒரு அகராதி அச்சு போட்டிருக்காளாம். அதில் 5000 வார்த்தைகள் இருக்காம்.

தகப்பன்: ஐயோ அதைமட்டும் உங்கம்மாகிட்டே சொல்லி விடாதே.

மனைவி (புருஷனிடம்) : வீட்டிலே கீழே யாரோ நடக்கிற மாதிரி தெரியுதே.

புருஷன் (வீட்டில் கீழேவந்து பார்த்ததில் ஒரு அன்னியன் இருப்பதைப்பார்த்து) : நீ யாரப்பா? இங்கு என்ன செய்கிறாய்?

திருடன்: நான் சில்லரை திருடனுங்கோ!

உடனே புருஷன் மனைவியிடம்வந்து, "கீழே சில்லரை திருடன்தான் இருக்கிறான். நாம்தான் கீழே சில்லரை ஒன்றும் வைக்கிறதில்லையே நமக்கென்ன பயம்"!

187016

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

தர்த்தீபுஸ்ஸலாத் என்னும் தொழுகையடவு ஹனபி.

வெளி வந்து விட்டது

சுத்த தமிழ்.

இரண்டாம் பதிப்பு

இதில் ஐந்து கலிமாக்கள், இஸ்லாத்தின் இயல்பு, ஈமான்கிலே, முழுக்கின் விதிகள், உளுவின் ஸுன்னத்துகள், உளுவின் துஆ, தொழுகையின் பர்ளுகள், தொழுகையின் வாஜிபுகள், பாங்கு, இகாமத்து, பாங்கு துஆ, ஐந்து தொழுகையின் தக்பீர்கள், ஸுன்னத்து தொழுகை தக்பீரு, அத்தஹிய்யாத், இஸ்திக்பார், பொது துஆ, ஐந்து தொழுகையின் துஆக்கள், கஸ்ரு தொழுகை, கஸ்ரு தொழுகைத் தக்பீர், ஜும்ஆ தொழுகை, அதன் தக்பீர், ஸஜ்தா திலாவத், நோன்பின் ஷர்த்து, நோன்பின் நிய்யத்து, நோன்பின் முறிச்சல்கள், நோன்பு திறக்கும்போது ஓதுகிற துஆ, தராவீஹின் விபரம், தராவீஹுடைய தக்பீர், நோன்பு பெருநாள் தக்பீர், ஹஜ்ஜு பெருநாள் தக்பீர், தக்பீருதஷ்ரீகி, மையத்துக்கு செய்யும் முறைகள் ஆகிய இவைகளும் மற்றும் விபரங்களும் அடங்கி இருக்கின்றன.

இதன் விலை அணா. 4

ஷை அறபுத் தமிழ் விலை அணா. 8

ஸீரத்துல் பாறூக்.

இதாகிறது, நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய இரண்டாவது கலிபாவாகிய உமர் இப்னுல் கத்தாபு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சரித்திரம்.

இதில் அவர்களுடைய பிரபல்யங்களும், கீர்த்திகளும், வீரியங்களும், யுத்த சமார்த்தியங்களும், நீனில் வழுவாது நடக்கும் நீதிகளும் அடங்கி யிருக்கின்றன. எல்லா முஸ்லிம்களுக்கும் அவர்களுடைய மகிமை புலப்பட்டிருப்பதால் நாமதை இங்கு விரித்தெழுதவில்லை. இச்சரித்திரம் வாசிக்க வாசிக்க ஆனந்தத்தையும் ஆச்சரியத்தையும் உண்டாக்கு மென்பதில் ஐயமில்லை. இது இரண்டு பாகமாகும். முதற் பாகத்தில் அவர்களுடைய சரித்திரங்களும், இண்டாம் பாகத்தில் அவர்களுடை நீதிகளும் அடங்கி இருக்கின்றன. இரண்டு பாகமும் சேர்ந்தது. விலை ரூ. 3-0-0

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்
அவர்களின் அருமைப் புதல்வியாகிய

பாத்திமா நாயகி (ரலி) ஜீவிய சரித்திரம்

இச்சரித்திரத்தில் ஹஜ்ரத் பாத்திமா நாயகி அவர்களின் மாதாவாகிய உம்முல் மூஃமினீன் கதீஜா நாயகி அவர்களின் வம்ச பரம்பரையும், அவர்களின் பிறப்பும், பாத்திமா நாயகியின் பிறப்பும், பால்யகால அறிவும், பரஸ்பர அன்பும், நாயகியின் திருகல்யாணமும், அவர் தம் வீட்டில் குடித்தனம் நடத்தி வந்த ஒழுங்கும், தனது பர்த்தாவாகிய அலியாருக்கு இணங்கி நடந்த அழகு, அவர்களின் தயாள சிந்தையும், உழைப்பும், ஆண்டவனின் மீது பக்தியும், வணக்கமும், கபூலாக்கப்பட்ட துஆவும், ரஸூலுல்லாவுக்கு பாத்திமா நாயகியின்பால் இருந்து வந்த அன்பும், நாயகிக்கு தம் தந்தையின்பால் இருந்து வந்த பிரியமும், அவர்களின் நாணம், அடக்கம், அச்சம், முதலிய ஒழுங்குகளும், இமாம் ஹஸன் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்களின் மேம்பாடும், நாயகியின் வபாத்தும் விபரமாய் கூறப்பட்டிருப்பதுடன் இந்நாயகியின் ஜீவிய சரித்திரத்தில் நம் சகோதர சகோதரிகளுக்கு அரிய போதனைகளும் அடங்கி யிருக்கின்றன. ஒவ்வொரு முஸ்லிமும் இச்சரிதையை வாசித்துணர வேண்டியது மிக்க அவசியமாகும்.

இதன் விலை கிளேஸ் ரூ. 1–8–0
ஷை அறபுத் தமிழ் விலை ரூ. 2–14–0

ஸீரத்துல் குப்ரு வென்னும்
கதீஜா நாயகி ஜீவிய சரித்திரம்

கிளேஸ் காகிதம் விலை ரூ. 1–4–0
ஷை அறபுத் தமிழ் விலை ரூ. 2–2–0

ஹலரத் ஆயிஷா நாயகி அவர்களின் ஜீவிய சரித்திரம்

இதன் விலை கிளேஸ் ரூ. 1–9–0
ஷை அறபுத் தமிழ் ரூ. 4–0–0

மூன்று நாயகிகளின் ஜீவிய சரித்திரம்

விலை ரூ. 4–0–0 ஷை அறபுத் தமிழ் விலை ரூ. 8–0–0

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.